REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஜனவரி 1 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 92 இல. 01 | Monday 01, January, 2024 | 16பக்கங்கள் | 50/-

## அரச நிறுவனங்களில் இன்று புதுவருட நிகழ்வுகள்

புத்தாண்டு தொடக்கத்தை இன்று (01) சகல அரச ஊழியர்களின் பங்கேற்புடன் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்குமாறு, அரா சங்கம் அறிவித்துள்ளது. இது தொடர்பில், அமைச்சின் செயலாளர்கள், மாகாண செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்ட சபைகளுக்கு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர், சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். இதன் பிரகாரம் 06

## நாட்டை முன்னேற்றுவதற்கான பொறுப்புக்களுடன் செயற்படுவோம்



சவால்கள் மற்றும் எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியிலேயே புது வருடத்தை (2024) ஆரம்பிப்பதாகவும், ஆயிரக்கணக்கிலான நம், எண்ணங்களைப் பூர்த்தி செய்ய, நாட்டை தற்போதைய நெருக்கடிகளிலிருந்து மீட்டெடுக்க வேண்டியது அவசியம் என்றும் ஜனாதிபதி ரணில்விக்கரமசிங்க தெரிவித்துள்ளார். புத்தாண்டுச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த காலங்களில் நாம்செய்த அர்ப்பணிப்புக்கள் மற்றும் துயரங்களைத் தாங்கும் தியாகங்களின் பலனாக, நாட்டை 06

## புதிய சிந்தனையுடன் புத்தாண்டை வரவேற்று சவால்களை வெல்வோம்



பிறந்துள்ள புத்தாண்டில், புதிய எதிர்பார்ப்புக் களை வெல்லக்கூடிய செயற்பாடுகளில் முனைப்புடன் செயற்பட வாழ்த்துவதாக, பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

புதிய எதிர்பார்ப்புகளுடன் கூடிய நாட்டை உருவாக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள், இவ்வருட பட்ஜட்டில் உள்ளக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டைப் போலவே, பொருளாதார, 06

## தேசிய அபிலாஷைகளை நிறைவேற்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டும்



வெற்றிகளை விட எண்ணற்ற தோல்விகளை உள்ளடக்கிய ஒரு வருடம் முடிந்து புதிய வருடம் உதயமாவதாக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது; 2023 ஆம் ஆண்டு நம் மனதில் மகிழ்ச்சியைக் கொண்டுவரக் கூடியவாறு எதுவும் கிடைக்கவில்லை. இந்த ஆண்டில் மக்கள் வெற்றியின் சாயலைக் கூட காணவில்லை. முறையாக மக்கள் ஆணையைப் பெற்ற அரசாங்கத்தை உருவாக்கினாலன்றி, தற்போதைய குழப்பமான மற்றும் நம்பிக்கையற்ற இருழ் சூழ்ந்த காலத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. 06

# வருடாந்த அரச வருமானத்தில் 2023 இல், வரலாற்றுச் சாதனை

## மூன்று இலட்சத்து பதினோயிரத்து ஐந்நூறு கோடி ரூபா



நாட்டின் வரலாற்றில் முதன் முறையாக வருடமொன்றுக்கு மூன்று இலட்சத்து பதினோராயிரத்து ஐந்நூறு கோடி ரூபாவை (3115 பில்லியன்) அரசாங்கம் வருமானமாக ஈட்டியுள்ளது. கடந்த ஆண்டிலேயே (2023) இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

அரச வருமான வரலாற்றில் ஒரு வருடத்தில் கிடைத்த அதிகூடிய வருமானம் இதுவெனவும், அரசாங்கத்தின் மொத்த வரி வருமானம் மூன்று இலட்சம் கோடி ரூபாவைத் (மூன்று டிரில்லியன்) தாண்டியது இதுவே முதல் முறை எனவும் ஜனாதிபதி அலுவலகத்தின் அரச வருமானப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் எம்.ஜே. குணசிறி தெரிவித்தார். இது தவிர, அரசின் வரி வருவாயிலிருந்து, வட்டிச் செலவுகளைத் தவிர மற்ற செலவினங்களைச் சமாளிக்க முடிந்துள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இதன்படி, இரண்டரை தசாப்தங்களுக்குப் பிறகு, முதன்மைக் கணக்கில் 52 பில்லியன் ரூபா சமநிலையை பதிவு செய்வதும் சாத்தியமாகியுள்ளது. 2023 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த வருமானத்தின் அதிகரிப்பு குறித்து மேலும் கருத்து தெரிவித்த எம்.ஜே. குணசிறி:

2023ஆம் ஆண்டு 2752 பில்லியன் ரூபா வரி வருமானமும், வரி அல்லாத வருமானமாக 363 பில்லியன் ரூபாவும் பெறப்பட்டு மொத்த வருமானமாக 3115 பில்லியன் ரூபா கிடைத்துள்ளது.

இதன் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 1550 பில்லியன் ரூபாவையும் இலங்கை சுங்கம் 970 பில்லியன் ரூபாவையும் கலால் திணைக்களம் 170 பில்லியன் ரூபாவையும் வசூலித்துள்ளன. மூன்று பிரதான திணைக்களங்களுக்கு மேலதிகமாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் அரசாங்கத்திற்கு மானியங்களை வழங்கும் நிறுவனங்களின் நிதி அதிகரிப்பு அரச வருமானத்தின் அதிகரிப்புக்கு வழிவகுத்தது.

2022ஆம் ஆண்டு அரசாங்கத்தின் மொத்த வருமானம் 2013 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது. இதில் 1751 பில்லியன் ரூபா வரி வருமானமாக உள்ளது. 06

## துறைமுக அதிகார சபை, விமான நிலைய வருமானங்களை அதிகரிக்க திட்டம்

### புத்தாண்டிலிருந்து செயற்பாடுகள்



பிறந்துள்ள புத்தாண்டில் (2024) துறைமுக வருமானத்தை நூறு பில்லியன் ரூபாவாகவும், விமான நிலைய வருமானத்தை அறுபது பில்லியன் ரூபாவாகவும் அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். 2024ஆம் ஆண்டுக்கான அமைச்சின் அபிவிருத்திப் பணிகள் குறித்து அதிகாரிகளுக்கு விளக்கும் கலந்துரையாடலிலே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபற்றி தெரிவித்த அமைச்சர்: நாட்டின் பிரதான வருமானம் ஈட்டும் இரண்டு நிறுவனங்களான இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் விமான நிலையம் 06

## கொவிட் 19: தீவிரத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் அவசர முன்னேற்பாடுகள்



புதிய கொவிட் 19 திரிபு குறித்து அடிமட்டத்தில் எந்தவொரு ஆராய்வும் செய்யப்படாதுள்ள நிலையில், அண்மைக்காலமாக சுவாசக் கோளாறுகள் உள்ள நோயாளிகள் அதிகரித்துள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினர் 06

## தினகரனின் பஞ்சாங்கம்




தினகரன் பத்திரிகையுடன் வருடத்திற்கு ஒரு முறை வெளிவரும் பஞ்சாங்கம் இன்றைய தினகரனில் உள்ளது




## பிறந்துள்ள புது வருடத்தில் கொழும்பில் 10,000 வீடுகள்

### நிர்மாணப் பணிகள் மார்ச்சில் ஆரம்பம்



புத்தாண்டில் (2024) கொழும்பைச் சுற்றி 10, 000 வீடுகள் நிர்மாணிக்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

11 வீட்டுத் திட்டங்களின் கீழ், இவ்வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வீட்டுத் திட்டம் தொடர்பில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் மக்களை மீள்குடியேற்றுவதற்காக கிட்டத்தட்ட 6,500 வீடுகள் நிர்மாணிக்கப்படும்.

இவற்றில், ஆறு வீடமைப்புத் திட்டங்கள் சீன அரசாங்கத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும். இதற்காக 552 மில்லியன் சீன யுவான் (22 பில்லியன் ரூபா) உதவியாகப் பெறப்படும். அத்தோடு, 1996 வீடுகளும் நிர்மாணிக்கப்படும். 06




## 06 நடிகர் விஜய் இம்மாதம் இலங்கை வருகிறார்




இந்தோனேஷியாவில்

## சக்திவாய்ந்த தொடர் நில நடுக்கங்கள்




இந்தோனேஷியாவில் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கங்களால் பொது மக்கள் அச்சமடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இந்நடுக்கங்களால்,

சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படாவிடினும் பாரிய அதிர்வுகள் ஏற்படக்கூடுமென இந்தோனேஷியாவின் வானிலை தட்பவெப்ப நிலை மற்றும் புவி இயற்பியல் நிறுவனம் எச்சரித்துள்ளது. இந்தோனேசியாவின் மேற்கு பகுதியில் உள்ள ஆச்சே மாகாணத்தில் நேற்று (30) காலை இந்த சக்திவாய்ந்த நில நடுக்கங்கள் ஏற்பட்டன.

இந்நிலையில், வட பகுதியிலுள்ள பப்புவா மாகாணத்தின் 06

## சொகுசுக் கார்கள் மோதி விபத்து: ஒன்பது பேர் காயம்



புத்தளம் கொழும்பு பிரதான வீதியின் முந்தல் பிரதேச செயலகத்திற்கு முன்னால் நேற்று (30) மாலை இடம்பெற்ற வாகன விபத்தில், 09 ஒன்பது பேர் காயமடைந்தனர்.

புத்தளம் பகுதியிலிருந்து கொழும்பு திசை நோக்கிச் சென்ற காரும், நீர்கொழும்பு பகுதியிலிருந்து புத்தளம் நோக்கிப்பயணித்த காரும் நேருக்கு நேர் மோதி, 06

## பெரிய வெங்காய விலையில் வீழ்ச்சி

கடுமையாக உயர்வடைந்திருந்த பெரிய வெங்காயத்தின் விலை, சடுதியாக குறைவடைந்துள்ளதாக சந்தை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

300 முதல் 350 ரூபா வரை இவ்வாறு பெரிய வெங்காயத்தின் விலை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாக சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை 600 ரூபாவிற்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்பட்டது.

பெரிய வெங்காய ஏற்றுமதியை இந்தியா 06

## விமான நிலையத்தில் சிக்கிய தங்க பிஸ்கட்கள்



ஏழு மில்லியன் ரூபா பெறுமதியான 66 தங்க பிஸ்கட்டுகளுடன், ஒருவர் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

விமான நிலையத்திலிருந்து இதை, வெளியில் கொண்டு செல்ல முயன்றபோது விமான நிலைய சுங்க அதிகாரிகள் நேற்று இவரைக் கைது செய்தனர். இலங்கை கேட்டரிங் நிறுவனத்தில் சுமார் 15 வருடங்களாக பணிபுரியும் கிரிபத்கொடையைச் சேர்ந்த 35 வயதுடையவரே 06

## லிட்ரோ கேஸ் விலை இன்று முதல் அதிகரிப்பு



நாடளாவிய ரீதியில் நடைமுறைக்கு வரவுள்ள புதிய வற் (VAT) வரி திருத்தத்தின் மூலம் எரிவாயு விலை நாளை (01.01.2023) முதல் உயரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு மீதான வட் வரி மேலும் சேர்க்கப்பட்டதே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

எரிவாயுவுக்கு துறைமுகங்கள் மற்றும் விமான நிறுவனங்கள் விதிக்கும் 2.5% வரி நீக்கப்பட்டு 15.5% வீதத்தால் விலை அதிகரிக்கப்பட உள்ளது.

அதன்படி லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் 12.5 கிலோ கிராம் வீட்டு எரிவாயு 06

# நகர்வலம்






# ஹம்பாந்தோட்டையில் அடைமழை; மக்களின் இயல்புநிலை பாதிப்பு

## வயல்கள் நீரில் மூழ்கியதால் விவசாயிகள் பாதிப்பு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை மாவட்டமெங்கும் பெய்துவரும் அடைமழையின் காரணமாக மக்களின் அன்றாட வாழ்க்கை முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

பலமாத காலமாக தொடர்ச்சியாக மழைபெய்து வந்ததோடு மீண்டும் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக அடைமழை பெய்து வருவதினால் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

வெஹெரகல நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் உயர்வடைந்து வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதனால் மாணிக்க கங்கையின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதால் கதிர்காமம் புனித பிரதேசத்தின் ஒரு பகுதி



நீரில் மூழ்கியுள்ளது. அத்தோடு கதிர்காமம் புனித நகருக்கு வருகை தருவோர் மாணிக்க கங்கையினை பயன்படுத்துவதை தவிர்க்குமாறும் கோரப்படுகின்றனர்.

முருத்தவலை மற்றும் லுனுகம் வெஹெரை ஆகிய நீர்த்தேக்கங்களினதும் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதனால் தாழ்வான பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

கொழும்பு, கதிர்காமம் பிரதான பாதை ஹம்பாந்தோட்டையின் பல்வேறு பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளதோடு மேலும் பல சிறிய பாதைகளும் நீரில் மூழ்கியுள்ளன.

மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்து வருவதினால் மீனிற்கு தட்டுப்பாடு நிலவி வருவதோடு மீனவர்களது வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. கூலித் தொழிலாளர்களும் தொழில்களை மேற்கொள்ள முடியாமல் பாதிப்படைந்துள்ளனர்.

அதேபோல், விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்ட வயல்கள் பல பிரதேசங்களில் வெள்ளக்காடுகளாக காட்சியளிக்கின்றன.

இதனால் விவசாயிகளும் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

# அனைவரது வாழ்விலும் மகிழ்ச்சி கிட்டட்டும்

## இலங்கைக்கான சவூதி தூதுவர்



அமைதி, நல்லிணக்கம், செழுமைக்கான எதிர்பார்ப்பு மற்றும் அபிலாஷைகளை எமக்கு அளிக்கும் புத்தாண்டு அனைவரது வாழ்விலும் மகிழ்ச்சி, புதிய இலக்குகள், அடைவுகள், மற்றும் புதிய உத்வேகங்களையும் கொண்டு வரட்டும் என்று இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி தெரிவித்துள்ளார்.

புத்தாண்டின் நிமித்தம் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் அவர், புத்தாண்டின் நிமித்தம் இலங்கை மக்களாகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பான இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த சந்தர்ப்பத்தில் எதிர்காலம் சிறந்ததாக அமைய வேண்டும், பிறந்துள்ள புத்தாண்டு கடந்த ஆண்டுகளை விடவும் செழிப்பானதாக அமைய வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

2024 புத்தாண்டின் வருகையானது அமைதி, நல்லிணக்கம் மற்றும் செழுமைக்கான எதிர்பார்ப்பு மற்றும் அபிலாஷைகளை எமக்கு அளிக்கிறது. இரு நட்பு நாடுகளின் மக்களுக்கும் முன்னேற்றம், செழிப்பு மற்றும் மகிழ்ச்சியுடன் கூடிய ஒரு ஆண்டாக இவ்வாண்டு அமைய வாழ்த்துகிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# வசதி குறைந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு



ருஸைக் பாரூக், அஷ்ரப் ஏ சமத்

"காந்தா சவிய" பெண்கள் அமைப்பினால் வசதி குறைந்த குடும்ப மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள், பைகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் விநியோகம் செய்யும் வைபவம் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் காந்தா சவிய தலைவி பெரோசா முஸம்மில் தலைமையில் நடைபெற்றது.

ஏ. ஜே. எம். முஸம்மில் மன்றத்தின் கீழ் இயங்கும் "காந்தா சவிய" அமைப்பு கடந்த 28 வருடங்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் பாடசாலை புத்தகங்கள், பைகள் மற்றும் பாடசாலை உபகரணங்களை விநியோகித்து வருகின்றன.

இவ்வருடம் கொழும்பு மற்றும் பதுளை மாவட்டங்களிலுள்ள வசதி குறைந்த சுமார் 3000 சிறுவர்களுக்கு உபகரணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் காந்தா சவிய உறுப்பினர்கள், பெரோசா முஸம்மிலின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# பேருவளை நூன் கல்விக் கூடத்தில் மாணவர்களின் எழுத்தணி கண்காட்சி




பேருவளை நூன் கல்வி கூடத்தில் அரபு எழுத்தணி கலையினை (Arabic calligraphy) பூர்த்தி செய்த முதற் கட்ட மாணவர்களின் அரபு எழுத்தணி கண்காட்சியொன்று அண்மையில் பேருவளை நூன் கல்விக்கூட மண்டபத்தில் கல்விக்கூட அரபு எழுத்தணி ஆசிரியர் அமீர் பைசலின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்றது.

காதிரியத்துன் நபவிய்யா தரீக்காவின் சங்கைக்குரிய சேஹ்நாயகம் இக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்ப நிகழ்வில் நபவிய்யா ஊடக பொறுப்பாளர்கள் மற்றும் நூன் கல்வி கூடத்தின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

பேருவளை பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்கள், அரபுக் கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் உலமாக்கள் மற்றும் பிரதேசத்தை சேர்ந்த பெருமளவிலான பொதுமக்கள் இக் கண்காட்சியை பார்வையிட்டனர்.

மேலும் பிற மாகாணங்களை சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் (பிற மதத்தவர்கள் உட்பட) இக் கண்காட்சியில் கலந்து சிறப்பித்தனர்.

# சீனன்கோட்டை பௌண்டேஷன் ஏற்பாட்டில் இருபெரும் நிகழ்வுகள்

பேருவளை சீனன்கோட்டை பௌண்டேஷன் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட தையல் கலை பயிற்சி நெறியை பூர்த்தி செய்த நூறு மாணவிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட கைப்பணிக் கண்காட்சி அதன் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (30) நடைபெற்றது. தொழில் கல்வியை மேம்படுத்தும் நோக்கோடு நடாத்தப்பட்ட இப்பயிற்சி நெறியில் கலந்துகொண்ட மாணவிகளது திறமைகளை வெளிக்காட்டும் வகையில் கண்காட்சி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும்.

சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் சீனன்கோட்டை பௌண்டேஷனின் தலைவர் அல்ஹாஜ் பஸால் அதன் உறுப்பினர்கள் மற்றும் ஊர் பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்திய பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அரபாத் கரீம் (நளீமி), சீனன்கோட்டை பௌண்டேஷன் நிறுவனம் தொழில் கல்வியை வழங்கும் நோக்கோடு கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக தையல் கலை பயிற்சி நெறியை நடாத்திவருகின்றது எனவும் இதன் விளைவாக பல குடும்பங்களது பொருளாதார நிலை முன்னேற்றம் கண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.





படமும் தகவலும் : அஜ்வாத் பாஸி







# பிறந்திருக்கும் இப்புத்தாண்டு செழிப்பான ஆண்டாக வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



மக்களின் சிந்தனைகளில் ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தி செழிப்பான எதிர்காலத்தை உருவாக்கும் ஆண்டாக பிறந்திருக்கும் புத்தாண்டு அமைய வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவரது

செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

"தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழ் மக்களின் நம்பிக்கை. அரசியல் அபிலாசைகளை பெற்று சகல வளங்களையும் கொண்டவர்கர்களாக இந்நாட்டிலே வாழ்கின்ற சூழல் உருவாகும் என்ற நம்பிக்கையோடு எத்தனையோ வருடங்களை எமது மக்கள் கடத்திவிட்டனர்.

இருந்த போதிலும், அந்த நம்பிக்கைகள் இதுவரை பூரணமாக்கப்படவில்லை. இந்த ஆதங்கம் எனக்கும் இருக்கிறது.

எமது மக்களின் எதிர்பார்ப்புக்கள் பூரணமாகாமல் இருப்பதற்கு பிரதான காரணம், எமது தரப்பில் இருக்கின்ற பலவீனங்களும் குறுகிய நோக்கங்களை கொண்ட சுயநல சிந்தனைகளுமே.

எமது மக்களின் அபிலாஷைகள் அனைத்தும் நிறைவேறுமாக இருந்தால், தங்களுடைய அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடும் என்று அஞ்சுகின்ற சுயநல தமிழ் அரசியல் தரப்புக்கள், தென்னிலங்கை தொடர்பான நம்பிக்கையீனங்களை அதிகரிப்பதிலும், உருவாகின்ற பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் அணுகாமல் வீரியமாக்கும் வகையில் அணுகுவதையும் தங்களின் அரசியல் கொள்கையாக வரித்துக் கொண்டுள்ளனர்.

ஆனால் எமது அணுகுமுறை என்பது வித்தியாசமானது. எமக்கு கிடைக்கின்ற மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களையும் வளங்களையும் பயன்படுத்தி எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்ப்பது அவசியம். அபிவிருத்தி திட்டங்களை முடிந்தளவு முன்னெடுப்பதன் மூலம் எமது மக்களின் வாழ்வியலைப் பாதுகாக்கின்ற சமகாலத்தில், இருப்பதை பாதுகாத்துக் கொண்டு அரசியல் அபிலாசைகளை முன்நோக்கி நகர்த்துகின்ற தந்திரோபாய நகர்வுகளையும் முன்னெடுப்பதே எமது திட்டங்களில் பிரதானமானவை. பிறந்துள்ள புத்தாண்டு இத்திட்டங்கள் வெற்றியளிக்கவும் நிறைவேறவும் வழி ஏற்படுத்தட்டும்.


இலங்கைத் திருநாட்டில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் 2024ஆம் ஆண்டு சுபீட்சம் நிறைந்த ஆண்டாக மலர இறைவனை பிரார்த்திக்கின்றோம்.



ROBINSON
ROBINSON (PRIVATE) LIMITED
Since 1993
176, மெயின் வீதி, கொழும்பு - 11. தொலைபேசி: 2422565, 2448755 | E-Mail: ashok@robinsonlk.com

**பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கான விசேட அறிவித்தல்**

பெறுமதி சேர் வரி (VAT) 15% இலிருந்து 18% ஆக உயர்த்தப்பட்டதை தொடர்ந்து உரிமம் பெற்ற தொலைத்தொடர்பு சேவை என்ற வகையில் எதிர்வரும் 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் அனைத்து தொலைத்தொடர்பு மற்றும் PayTV சேவைகளுக்கான வரியை நாம் மாற்றியமைக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளமையை எமது மதிப்புமிக்க வாடிக்கையாளராகிய தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

இதுவரை காலமும் நீங்கள் தொடர்ந்து அளிக்கும் விசுவாசத்திற்கு நாம் நன்றி கூறும் அதேவேளை இந்த பெறுமதி சேர் வரி (VAT) மாற்றத்தால் தங்களுக்கு நேரும் அசௌகரியங்களுக்கு நாம் வருந்துகின்றோம். இந்த சந்தர்ப்பத்தில் தங்களுக்கு அதிசிறந்த சேவையை வழங்க நாம் தொடர்ச்சியான அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றோம் என்பதை வலியுறுத்துகின்றோம்.

நன்றி.

airtel Dialog HUTCH LANKA BELL SLTMOBITEL



இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

ZUZI
The Clothing Store
217 George R. De Silva Mawatha, Colombo 13
Phone: 0112 335 276

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
2024
SARITA
Textorium
Right Place for Right Choice
No. 99, Main Street, Colombo 11.
Tel : 2446023
Web : Sarita.lk
www.facebook.com/saritatextorium



# தினகரன்

THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321


சோபகிருது வருடம் மார்கழி மாதம் 17ஆம் நாள் திங்கட்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஆகிறா பிறை 17

### குறள் தரும் சிந்தனை



ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்

தாகம் கொண்டு தவிக்கும் பசுவுக்காகத் தண்ணீர் வேண்டுமென இரந்து கேட்டாலும்கூட, அப்படிக் கேட்கும் நாவுக்கு, அதைவிட இழிவானது வேறொன்றுமில்லை.

## நம்பிக்கை எதிர்பார்ப்புகளுடன் பிறந்திருக்கும் புத்தாண்டு

இலங்கையர் உட்பட முழு உலக மக்களும் மற்றொரு புதிய ஆண்டில் தற்போது பிரவேசித்துள்ளனர். கடந்த வருடங்களைப் போன்றல்லாது இப்புத்தாண்டு மிகவும் விமரிசையாகவும், கோலாகலமாகவும் வரவேற்கப்பட்டுள்ளது.

2019 ஆண்டின் இறுதிப் பகுதியில் தோற்றம் பெற்ற கொவிட் 19 தொற்று உலகிற்கு பெரும் சவாலானதோடு, கடந்த இரண்டு வருடங்களாகப் புத்தாண்டு வரவேற்பும் சோபை இழந்தே காணப்பட்டது.

அதிலும் இலங்கை மக்கள் எதிர்கொண்ட பாதிப்புகள் சற்று அதிகமென்றே கூற வேண்டும். இந்நாடு கொவிட் 19 தொற்றிலிருந்து மீண்டெழுந்த போதிலும், சிறிது காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. இப்பொருளாதார நெருக்கடியின் பின்புலத்தில் அரசியலும் கொதிநிலையை அடைந்ததோடு, ஆட்சித் தலைமையையே அது மாற்றியமைத்தது.

அன்றைய அரசியல் இந்நெருக்கடிக்குத் தீர்வு காணவும், பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கவும் எவரும் முன்வராத சூழலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022 நடுப்பகுதியில் நாட்டைப் பொறுப்பேற்றார்.

நாட்டின் தலைமையை ஏற்றதோடு பொருளாதார ரீதியில் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களையும் அவர் ஆரம்பித்தார். அதன் பயனாக பொருளாதார நெருக்கடியின் அழுத்தங்களும் பாதிப்புக்களும் கட்டம் கட்டமாக நீங்கியதோடு, வங்குரோத்து நிலையில் இருந்து நாடு மீட்சி பெறலானது. ஆளுமையான தலைமையை வழங்கி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார் ஜனாதிபதி.

இதன் விளைவாகப் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நாடு, குறுகிய காலப்பகுதியில் தலைநிமிர்ந்து நிற்கும் நிலையை அடைந்திருக்கிறது. அதனால் கடந்த சில வருடங்களாக சோபை இழந்து போயிருந்த புத்தாண்டுக் கொண்டாட்டம் இம்முறை கோலாகலம் நிறைந்ததாக அமைந்துள்ளது. அத்தோடு புதிய நம்பிக்கைகளுடன் புதிய ஆண்டில் பிரவேசிக்கவும் மக்களால் முடிந்துள்ளது.

வங்குரோத்து நிலையை அடைந்த நாட்டை குறுகிய காலப்பகுதிக்குள் மீளக்கட்டியெழுப்புவதற்கு சர்வதேச உதவிகள் பெரிதும் உதவியுள்ளன. என்றாலும் சர்வதேச உதவிகளைப் பயன்படுத்திக் கொள்கின்ற அதேவேளை, சுயமாக முன்னேற்றப்பாதையில் பயணிக்கவும் தவறக் கூடாது.

இந்தச் சூழலில் வரிகளை அதிகரிக்கக்கூடிய நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது. பொருளாதார நெருக்கடியின் விளைவாக நம்பிக்கை அற்றிருந்த நாட்டில் நம்பிக்கையுடன் முன்னோக்கிப் பயணிக்கக்கூடிய நிலை உருவாகியுள்ளது. இந்நிலையில் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களில் இருந்து முழுமையாக மீட்சி பெறும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவை மக்கள் மீது சுமையை ஏற்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் அல்ல. நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தியுள்ள திட்டங்களாகும். அதனால் இத்திட்டங்களின் நிமித்தம் மக்கள் பொறுமை காப்பது அவசியம். அது வளமானதும் சுபீட்சமானதுமான பொருளாதார வாழ்வைப் பெற்றுத்தர வழிவகுக்கக் கூடியதாகும்.

அந்த வகையில் இப்புத்தாண்டின் நிமித்தம் ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், 'பல சவால்களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் மத்தியிலேயே நாம் 2024 புதுவருடத்தை ஆரம்பிக்கிறோம். ஆயிரக்கணக்கிலான எண்ணங்களைப் பூர்த்தி செய்து கொள்ள, நம் நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும். பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக, அதே பாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டியது அவசியம். அது மலர்ப்பாதையாக இல்லாமல், முட்களும், கற்களும் நிறைந்த பாதையாகவே அமைந்திருக்கிறது. அதனால், இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் போது எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்துகொள்ள வேண்டியது இலங்கையராகிய எமது பொறுப்பாகும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அது தான் உண்மை. இந்நாடு எவ்வாறான நிலையில் இருந்து தற்போதைய நிலையை அடைந்திருக்கிறது என்பதை இச்செய்தி எடுத்தியம்புகிறது. அதேநேரம் இந்நாடு அடைய எதிர்பார்க்கும் பாதையும் சவால்கள் நிறைந்தது. அதற்காக அர்ப்பணிப்புக்களுடன் செயற்பட வேண்டிய தேவையும் உள்ளது.

பொருளாதார மறுமலர்ச்சியின் நிமித்தம் நாடு நம்பிக்கையுடன் பயணிக்கத் தொடங்கிவிட்டது என்பது தெளிவானது. கடந்த வருடம் மாத்திரம் 15 இலட்சம் உல்லாசப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். அதிலும் டிசம்பர் மாத்திரம் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட உல்லாசப் பயணிகள் வருகை தந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆகவே பொருளாதார முன்னேற்றத்திற்காக முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு மத்தியில் புதியதொரு ஆண்டில் பிரவேசித்து இருக்கும் இலங்கையராகிய நாம், இத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அது நாட்டின் அனைத்து பிரஜைகளதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# மலையக தமிழ்மக்கள் மீது இந்தியா கூடுதல் கரிசனை

இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டும், அவர்களுக்கான அங்கீகாரத்தை உறுதிப்படுத்தும் வகையிலும் ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்பட்டுள்ளது.

புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ஆலோசனையின் பேரிலும், தமிழக பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் கே. அண்ணாமலையின் ஏற்பாட்டிலும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மலையக மக்களைக் கௌரவிக்கும் வகையில் இந்திய தபால்துறை அமைச்சினூடாக இந்த நினைவுத் தபால் தலை வெளியிடப்பட்டுள்ளது.



இந்நிகழ்வின்போது, பாரதிய ஜனதா கட்சியின் தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானுக்கு நினைவுத் தபால்தலையைக் கையளித்தார்.

இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கைக்கு வருகை தந்தமை தொடர்பான நூற்றுக் கணக்கான ஆவணங்கள், கோப்புகள் பரிசீலிக்கப்பட்டு, உரிய வரலாற்றுச் சுவடுகளோடு இந்த முத்திரையை வெளியிடுவதற்கு இந்திய தபால் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

இதன் மூலம் இலங்கைக்கு இடம்பெயர்ந்த தமிழர்கள் தொடர்பிலான வரலாறு இந்திய மக்களுக்கு எளிதில் எடுத்துரைக்கப்படுகிறது. இந்தியாவிலிருந்து இடம்பெயர்ந்து பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், சீனா, ஈரான், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பூட்டான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் சுமார் 32,285,425 இந்திய வம்சாவளி மக்கள் வசித்து வருகின்ற போதிலும், இலங்கையில் 200 ஆண்டுகளாக வாழ்ந்து வரும் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்காக முத்திரை வெளியிடப்பட்டுள்ளமை மலையக மக்களுக்கு அளிக்கப்படும் கௌரவமாகவே பார்க்கப்படுகிறது.

இதேவேளை மலையகம் மீதான அக்கறையை மேற்படி முத்திரை வெளியீடு வெளிப்படுத்துகிறது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.

"இந்திய அரசாங்கமும், இந்திய மக்களும் இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மக்களுக்கு வழங்கி வரும் அன்புக்கும், ஆதரவுக்கும், ஒத்துழைப்புகளுக்கும் மலையக மக்கள் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்" என்றும் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில், பாரதிய ஜனதா கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நினைவு முத்திரை வெளியீட்டு நிகழ்வு கடந்த 30.12.2023 அன்று நடைபெற்றது.



### இந்திய வம்சாவளி மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு புதுடில்லியில் ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்பட்டமை தொடர்பாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் நன்றி



இது தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் தெரிவிக்கையில், "இந்நிகழ்வில் பங்கேற்குமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டதற்கு முதலில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தவிர்க்க முடியாத காரணத்தால் நிகழ்வில் பங்கேற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதனையிட்டு வருந்துகின்றேன். எனினும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தி எமது கட்சித் தலைவர் உள்ளிட்ட குழுவினர் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.





அதேபோல பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கும், பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய தலைவர் ஜே.பி நட்டா, தமிழக மாநில தலைவர் அண்ணாமலை மற்றும் விழா ஏற்பாட்டு குழுவினருக்கு மலையக மக்கள் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான சிறந்த உறவுப் பாலமாக அன்று முதல் இன்று வரை காங்கிரஸ் இருந்து வருகின்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கு என்றும் நாம் ஒத்துழைப்புகளை வழங்குவோம்.

மலையக மக்களுக்காக இந்திய அரசாங்கம் பல உதவிகளை செய்துள்ளது. வீடமைப்புத் திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள், ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், தொழில் பயிற்சிகள் என அந்த பட்டியலை நீடித்துக் கொண்டே செல்லலாம்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களை கௌரவப்படுத்தும் வகையில் பாரதிய ஜனதாக் கட்சியின் ஏற்பாட்டில் ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்பட்டுள்ளமையும் இதற்கு மற்றுமொறு சான்றாகும்.

இந்நிலையில் எமது மக்களை கௌரவப்படுத்தி நினைவு முத்திரை வெளியிடப்பட்டுள்ளமை எமது மக்கள் மீதான இந்தியாவின் கரிசனையை உறுதிப்படுத்துகின்றது." என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

# எழுத்தாளர் முருகபூபதிக்கு அடுத்தவாரம் அவுஸ்திரேலியாவில் பாராட்டுவிழா

பிரபல எழுத்தாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான லெ.முருகபூபதி அவர்களுக்கு கனடா தமிழ் இலக்கியத் தோட்டம், 2022 ஆம் ஆண்டுக்கான இயல்விருதையும், பிரான்ஸ் வென்மேரி அறக்கட்டளை இலக்கியச் சாதனையாளர் விருதையும் வழங்கிக் கௌரவித்துள்ளன.

இதனைத் தொடர்ந்து எழுத்தாளர் முருகபூபதியைப் பாராட்டும் விழா, அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் ஏற்பாட்டில் மெல்பனில் 2024 ஜனவரி 7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

112 High St, Berwick VIC 3806, Australia என்ற முகவரியில் அமைந்துள்ள மூத்த பிரசைகள் மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்த விழாவில் முருகபூபதியின் இலக்கியச் சாதனைகள், சமூகநலச் செயற்பாடுகள் என்பவற்றைப்பற்றி அறிஞர்களும், இலக்கியவாதிகளும், சமூகச் செயற்பாட்டாளர்களும் உரையாற்றவுள்ளனர்.

சிறுகதை, நாவல், கட்டுரை, பயண இலக்கியம், சிறுவர் இலக்கியம், கடித இலக்கியம், நேர்காணல் பதிவுகள், புனைவு சாராத ஆக்கங்கள் முதலிய பல்துறைகளிலும் எழுதிவரும் அவரது படைப்புகள் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களாக வெளிவந்துள்ளன.




எழுத்தாளர் முருகபூபதி முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் பத்திரிகைத்துறையில் பணியாற்றியவர். அவரது 'சுமையின் பங்காளிகள்' என்ற சிறுகதைத் தொகுப்பு நூலுக்கு 1976 ஆம் ஆண்டிலும், 'பறவைகள்' என்ற நாவலுக்கு 2003 ஆம் ஆண்டிலும் இலங்கையில் தேசிய சாகித்திய விருதுகள் கிடைத்தன.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகள் எங்கும் வெளிவரும் பத்திரிகைகளிலும், இலக்கிய இதழ்களிலும் தொடர்ந்து எழுதிவரும் முருகபூபதி, 1987 ஆம் ஆண்டு முதல் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகிறார்.

இலங்கையில் போரினால் பெற்றோரை இழந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக, கடந்த 35 வருடங்களாக உதவி வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான 'இலங்கை மாணவர் கல்வி நிதியம்' என்னும் அமைப்பின் நிறுவனரான முருகபூபதி, அவுஸ்திரேலியாவில் 2001 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் எழுத்தாளர் விழாவை நடத்திவரும் அவுஸ்திரேலிய தமிழ் இலக்கியக் கலைச் சங்கத்தையும் ஆரம்பித்து அதிலும் தொடர்ந்து செயற்பட்டு வருகிறார்.

இவ்வாறு தமிழ் இலக்கியம், கலை, சமூகம் சார்ந்த பணிகளில் இடைவிடாது இயங்கிவரும் முருகபூபதிக்கு கனடா தமிழ் இலக்கியத் தோட்டமும், பிரான்ஸ் வென்மேரி அறக்கட்டளையும் விருதுகளை வழங்கிக் கௌரவித்தமைக்காக நடத்தப்படவிருக்கும் இந்தப் பாராட்டுவிழாவினைஅவுஸ்திரேலிய தமிழ் இலக்கியக் கலைச் சங்கம் நடத்துகிறது. இந்தப் பாராட்டுவிழாவில் கலந்து கொள்ளுமாறு அன்பர்கள், நண்பர்கள், கலை இலக்கிய, ஊடக ஆர்வலர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.




**தொடர்புகளுக்கு:**
**கிறிஸ்ரி நல்லரெத்தினம்**
**+ 61 450 450 998**
**சு.ஸ்ரீகந்தராசா + 61 478 060 366**
**(அவுஸ்திரேலிய தமிழ் இலக்கியக் கலைச் சங்கம்)**

தகவல்:
**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# இலங்கையர்களுக்கு 2023 இல் அதிகளவு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை வழங்கிய நாடு சவூதி அரேபியா

கடந்த சில வருடங்களாக சுமார் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான இலங்கையர்கள் வருடாந்தம் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைத் தேடிப் பயணிக்கும் நிலையில் 2023 இல் இலங்கையர்களுக்கு அதிக வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை வழங்கிய நாடாக சவூதி அரேபியா பதிவாகியுள்ளது.

குறிப்பாக இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்து அந்நிய செலாவணியின் கையிருப்பினை அதிகரித்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கும் இத்தருணத்தில், இவ்வாறான அதிக வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் இலங்கைப் பொருளாதாரத்தில் கணிசமான பங்களிப்பினைச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

இது தொடர்பாக சவூதிக்கான இலங்கைத் தூதுவர் பி.எம் அம்சா கடந்த சனிக்கிழமையன்று சவூதி 'அரப்நியூஸ்' நாளேடுக்கு அளித்த பேட்டியில், 2023 இல் மாத்திரம் சுமார் 7 பில்லியன் டொலர்களை இலங்கை அந்நிய செலாவணியாகப் பெற்றுள்ளது எனவும் வருடாந்தம் ஏழு தொடக்கம் எட்டு பில்லியன் டொலர் வரை கிடைக்கப்பெறும் அந்நிய செலாவணியில் சுமார் 15% தொடக்கம் 20% வீதத்தினை சவூதி அரேபியாவில் புலம்பெயர்ந்து வேலைவாய்ப்புகளில் ஈடுபடும் இலங்கையர்களின் மூலம் பெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.



இலங்கையர்களுக்கு மிகப்பொருத்தமான வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையாக மத்தியகிழக்கு நாடுகள் திகழும் இவ்வேளையில் சவூதி அரேபியாவின் '2030 தூரநோக்கு' திட்டத்திற்கமைய மேற்கொள்ளப்படும் பாரிய செயல்த்திட்டங்களில் வெற்றிடமாகியுள்ள வேலைவாய்ப்புகளின் மூலம் சவூதி அரேபியா இலங்கையர்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான முக்கிய தலமாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்வருட ஆரம்பத்தில் மார்ச் மாதத்தில் இலங்கை கல்வியமைச்சின் கீழ் இயங்கும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவுக்கும் சவூதி அரேபிய மனிதவள மற்றும் சமூக மேம்பட்டு அமைச்சின் கீழ் இயங்கும் தகாமுல் ஆணையத்திற்கும் இடையில் கொழும்பில் வைத்து கைச்சாத்திடப்பட்ட 'திறன் உறுதிப்படுத்தல் செயற்திட்டம்' (Skill Verification Program SVP) சம்பந்தமான புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் சவூதி அரேபிய வேலைவாய்ப்புச் சந்தையில் இலங்கையர்களுக்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்தன.

குறிப்பாக இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானியின் அயராத முயற்சியின் ஒரு அங்கமாக கைச்சாத்தாகிய மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சுமார் 23 விதமான பிரதான திறன்சார் வேலைவாய்ப்புகள் இலங்கையர்களுக்காக அடையாளமிடப்பட்டன. அவற்றில் சென்ற வருடங்களுக்கு மாற்றமாக இவ்வருடம் பொறியியல், கட்டுமானத்துறைசார் வேலைவாய்ப்புகள், அதேபோன்று சுற்றுலாத்துறைசார் வேலைவாய்ப்புகள் இலங்கையர்களின் அதிக கவனத்தினை ஈர்த்துள்ளதாக அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

மேற்கூறப்பட்ட 'திறன் உறுதிப்படுத்தல் செயற்திட்டம்' சம்பந்தமான உடன்படிக்கையின் வாயிலாக இலங்கையர்களுக்கு சுமார் 12,000 வேலைவாய்ப்புகள் சென்ற வருடங்களைவிட அதிகமாகக் கிடைத்துள்ளன எனவும் அரப்நியூஸ் நாளேடு குறிப்பிட்டுள்ளது.



புள்ளிவிபரங்கள் மற்றும் அறிக்கைகளின்படி 2023 இல் சவூதி அரேபியாவில் இலங்கையர்களுக்கான வேலைவாய்ப்புகள் எண்ணிக்கையிலும், தரத்திலும் மேம்பாட்டினைச் சுட்டிக்காட்டும் இத்தருணத்தில் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்நல்ல நிலையினை எதிர்வரும் வருடங்களிலும் குறிப்பாக 2030 வரை தக்கவைத்துக் கொள்வது அவைவரினதும் கடமையாகும். குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் இலங்கை தொழில் சமூகம் மற்றும் அவர்களுக்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்புவாய்ந்த ஆணையங்கள் இச்சிறந்த முன்னேற்றத்தினைத் தக்கவைத்துக் கொள்ள வழிசெய்யும். அதன்மூலம் இருநாட்டு உறவுகளும் மேம்படவும் இலங்கையின் பொருளாதாரம் சீரடையவும் வழியேற்படும்.

**கலாநிதி அம்ஜத் ராசிக்...**
*(சவூதி அரேபிய ஆய்வுகளுக்கான ஆர்வலர்)*

மலர்ந்துள்ள 2024ஆம் ஆண்டிலும்

# நாட்டின் கல்வித்துறை மறுமலர்ச்சிக்காக சயீடா நிறுவனம் தொடர்ந்தும் உதவும்

இணைப்பாளர் நௌஸர் பௌஸி

**(அஜ்வாத் பாஸி)**

நாட்டின் கல்வித்துறை மறுமலர்ச்சிக்கு எமது சயீடா நிறுவனம் கடந்த வருடம் மேற்கொண்ட பணிகளைப்போன்று இன்று மலர்ந்துள்ள 2024ஆம் ஆண்டிலும் பல திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக அமைப்பின் இலங்கை இணைப்பாளரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான நௌஸர் பௌஸி தெரிவித்தார்.

சயீடா நிறுவனத்தினால் கடந்த வருடம் (2023) பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பு நேற்று (31) கொழும்பு அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில்; எமது சயீடா நிறுவனம் இந்நாட்டின் கல்வி மறுமலர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட ஒரு சமூகசேவை அமைப்பாகும்.



நாட்டில் வாழுகின்ற சகல மக்களுக்கும் சிறந்த கல்வியை வழங்க வேண்டுமென்ற தூரநோக்கோடு நாம் செயலாற்றி வருகின்றோம். எமக்கு தேவை நாட்டிற்கு சிறந்த மாணவர் சமூகமொன்றை உருவாக்கி ஒவ்வொரு வீட்டிற்கும் சிறந்த கல்விமான்களை உருவாக்க வேண்டும் என்பதே.

இதனை மையப்படுத்தியே எமது சயீடா நிறுவனம் செயலாற்றி வருகிறது.

கடந்த வருடம் எமது அமைப்பினால் தென் மாகாணத்தின் காலி, மாத்தறை பகுதி பாடசாலைகளுக்கு நிறைய சேவைகளை முன்னெடுத்தோம். இதில் அரசாங்கத்தின் அமைச்சர்களும் கலந்து எமக்கு ஊக்கமளித்தனர்.

அதேபோல், மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்திலுள்ள பேருவளை, தர்கா நகர் போன்ற பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கும் கட்டடங்கள் உட்பட சேவைகளையும் வழங்கியுள்ளோம்.

அதேபோன்று, டிசம்பர் மாதத்திலும் கொழும்பிலுள்ள சுமார் 10 பாடசாலைகளில் புதிய கட்டடத்திற்காக அடிக்கல் நட்டிவைத்தோம். அதேபோல் தொடர்ந்தும் கல்வியில் விழிப்புணர்வை ஏற்படுத்த மலர்ந்துள்ள புத்தாண்டில் எமது சயீடா நிறுவனம் திடசங்கற்பம்பூண்டுள்ளதாகவும் இணைப்பாளர் நௌஸர் பௌஸி மேலும் தெரிவித்தார்.

# உள்நாட்டு தயாரிப்பு துப்பாக்கியுடன் ஒருவர் கைது

**(அநுராதபுரம் தினகரன் நிருபர் )**

சட்டவிரோதமான முறையில் உள்நாட்டில் தயாரித்த துப்பாக்கியொன்றினை பயன்படுத்தி கொள்ளைச் சம்பவங்கள் உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர் ஒருவரை ஹொரவபொத்தான பொலிஸார் கைது செய்துள்ளனர். கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பில் ஹொரவபொத்தான பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் பல கோணங்களிலும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில், கடந்த 30 ஆம் திகதி ஹொரவபொத்தான ரிலத்தேவ பகுதியில் சுற்றிவளைப்பினை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.
















# நடிகர் விஜய் இம்மாதம் இலங்கை வருகிறார்



தென்னிந்திய பிரபல நடிகரான தளபதி விஜய், தனது 68 ஆவது படத்தின் படப்பிடிப்பிற்காக இலங்கைக்கு வரவுள்ளதாக, தகவல்கள் வெளியாகியுள்ளன.

'லியோ' படத்தின் வெற்றிக்குப் பின்னர், விஜய் தனது அடுத்த படத்திற்காக இயக்குநர் வெங்கட் பிரபுவுடன் இணைந்துள்ளார். படப்பிடிப்பும் விறுவிறுப்பாக நடந்து வருகின்றது. இப்படத்தின் ஹைதராபாத் ஷெட்யூல் முடிவடைந்துள்ளது. படத்தின் இந்த ஷெட்யூலுக்காக இயக்குநர் வெங்கட் பிரபு முக்கிய நடிகர்களை ஒருங்கிணைத்துள்ளார்.

திட்டமிடப்பட்ட நேரத்திற்கு முன்பே படப்பிடிப்பு முடிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் படக்குழு, தங்கள் குடும்பங்களுடன் புத்தாண்டுக்காக ஓய்வு எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 'தளபதி 68' படத்தின் அடுத்த ஷெட்யூல் இலங்கையில் இடம்பெறும் எனவும், ஜனவரி இரண்டாவது வாரத்தில் படப்பிடிப்புகள் தொடங்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. இதற்கிடையில், 'தளபதி 68' படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் தலைப்பு விரைவில் வெளியிடப்படும் என்று கூறப்படுகின்றது.

'தளபதி 68' ஒரு டைம் ட்ராவல் படம் என்று கூறப்படுகின்றது. இதில் விஜய் இரட்டை வேடத்தில் நடிக்கிறார்.மேலும், பல நட்சத்திரங்கள் படத்தில் வலுவான கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளனர்.

இந்தப் படத்துக்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கின்றார்.

# வி.டி. செல்வராஜின் மறைவு மலையக சமூகத்துக்கு பெரும் இழப்பு

## மலையக மக்கள் முன்னணி அனுதாபம்



மலையக கல்வித் துறை, அரசியல் எழுச்சி மற்றும் தமிழ் இலக்கியத்துறைக்கும் பெரும் பங்காற்றிய அமரர் வி.டி. செல்வராஜின் மறைவு மலையக சமுகத்திற்கு பேரிழப்பாகும்.

ஸ்ரீபாத தேசிய கல்லூரியின் முன்னாள் உப பீடாதிபதியான அன்னார் மலையக மக்கள் முன்னனி ஸ்தாபகர்களில் ஒருவரும் சிரேஸ்ட உப தலைவருமாகிய அமரர் வி.டி. தர்மலிங்கத்தின் சகோதரரும் ஆவார். அமரர் செல்வராஜ் ம.ம.முன்னனி அமைப்பை ஸ்தாபிப்பதில் பெரும் பங்காற்றியவர்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்திப்பதோடு, அவரின் பிரிவுத் துயரில் வாடும் குடும்பத்தினருக்கு மலையக மக்கள் முன்னணி சார்பில் மது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதாக மலையக மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் பேராசிரியர் எஸ். விஜேசந்திரன் தெரிவித்துள்ளார்.


செல்வராஜ் நேற்று (31) காலமானதை முன்னிட்டு மலையக மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் இந்த அனுதாபச் செய்தியை விடுத்துள்ளார்.

# இன்றைய பலன்கள்

## ( 01. 01. 2024 )



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)




**மேஷம்:**
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். குடும்பத்தில் சலசலப்புகள் ஏற்படாமல் கலகலப்பாக இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது உத்தமம்.



**ரிஷபம்:**
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்வது உத்தமம். சகோதரருக்குள் இருந்த வாக்குவாதங்கள் அகலும். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும்.



**மிதுனம்:**
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய ஒப்பந்தங்களும் வந்து சேரும். குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களின் வருமானம் கிடைத்து மகிழ்ச்சி படுத்தும்.



**கடகம்:**
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் பிரச்சினைகள் உருவாக்கலாம். உத்தியோகத்தில் வேலை பளு அதிகரிக்கும்.



**சிம்மம்:**
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். பெற்றோர் வழியில் சில பிரச்சினைகளை சந்திப்பீர்கள். கடல் தாண்டி செல்வதில் தாமதங்கள் உருவாகும். புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**கன்னி:**
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். சிறு சிறு ஆரோக்கிய தொல்லைகள் வந்து அலைமோதும். பங்குதாரர்களின் விரோதத்தால் இதுவரை மூடி கிடந்த தொழில் இப்போது திறக்கப்படும்.



**துலாம்:**
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். தம்பதிகளுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். கல்யாண முயற்சிகளில் இருந்த தடை விலகும்.



**விருச்சிகம்:**
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். முத்தான தொழில்கள் வாய்க்கும் யோகம் உண்டு. முன்னேற்ற பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். எதிரிகள் பலம் குறையும்.



**தனுசு:**
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். பங்குச் சந்தை,வெளிநாட்டு வணிகத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வருமானம் திருப்திகரமாக இருக்கும். அதே நேரம் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும்.



**மகரம்:**
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். பாக்கியங்கள் வசூல் ஆகி பரவசப்படுத்தும். இடம் பூமி வாங்குவதிலிருந்த பிரச்சினை அகலும்.



**கும்பம்:**
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலம் உதிரி வருமானங்கள் வரலாம். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.



**மீனம்:**
ஆங்கில புத்தாண்டு சிறப்பாக அமையட்டும். வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து உத்தியோகத்திற்கான அழைப்புகள் வரலாம். பணிபுரியும் இடத்தில் பல நாட்களாக இருந்த பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும்.

# 14 நாட்களில் 85 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் பறிமுதல்

## 55 கோடி ரூபா சொத்துக்கள் முடக்கம்!

யுக்திய விசேட நடவடிக்கையின்போது 14 நாட்களில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் சந்தைப் பெறுமதி சுமார் 85 கோடி ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 55 கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்துக்கள் முடக்கப்பட்டதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு நேற்று (31) தெரிவித்துள்ளது.

இதேவேளை, குறித்த காலப் பகுதியில் போதைப்பொருள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக பொதுமக்கள் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு திணைக்களங்களுக்கு 10,798 தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

யுக்திய விசேட நடவடிக்கையினால் கைப்பற்றப்பட்ட மொத்த போதைப்பொருளின் சந்தைப் பெறுமதி 858 மில்லியன் ரூபாவாகும். போதைப்பொருள் கடத்தல்காரர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி 558.5 மில்லியனாகும் இதுபற்றி தகவல் வழங்க

10798 தொலைபேசி அழைப்புக்கள் வந்துள்ளதாகவும் அமைச்சின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"யுக்திய" நடவடிக்கையின் கீழ் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது கைப்பற்றப்பட்ட போதை பொருட்களின் விபரம்.

ஹெரோயின் 11 கிலோ 600 கிராம்
ஐஸ் 08 கிலோ 378 கிராம்
கஞ்சா 297 கிலோ 8 கிராம்
2,110,500 கஞ்சா செடிகள்
மாவா 119 கிலோ 600 கிராம்
ஏஸ் 35 கிலோ 800 கிராம்
ஹஷிஷ் 01 கிலோ 70 கிராம்
தூள் 03 கிலோ 700 கிராம்
குஷ் 555 கிராம்
72,272 மாத்திரைகள்

இந்த நடவடிக்கைகளில் மொத்தம் 20797 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களில் 1018 சந்தேகநபர்கள் தடுப்புக்காவல் உத்தரவின் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன், சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பில் 189 சந்தேகநபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 1298 போதைக்கு அடிமையானவர்கள் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

அத்துடன், பதிவு செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பட்டியலில் இருந்த 4584 சந்தேக நபர்களில் 1625 சந்தேக நபர்களை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் மற்றும் விசேட பணியகம் இணைந்து கைது செய்துள்ளது.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் மொத்த சந்தை மதிப்பு 858 மில்லியனுக்கும் அதிகமாகும் என தெரியவந்துள்ளது.

மேலும், இந்த நடவடிக்கையுடன் இணைந்து, நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் வீடுகள் உள்ளிட்ட சொத்துக்களின் மொத்த சந்தை பெறுமதி 558.5 மில்லியனுக்கும் அதிகமாகும் என தெரியவந்துள்ளது.

## நாட்டை முன்னேற்றுவதற்கான...

வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்கான அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்க முடிந்துள்ளது. இருப்பினும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக, அதேபாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டியுள்ளது.

அது மலர்ப் பாதையாக இல்லாமல், முட்களும், கற்களும் நிறைந்த பாதையாகவே அமைந்திருக்கும். இதனால், நாட்டை மீளக் கட்டியெழுப்பும் போது எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்துகொள்ள வேண்டியது இலங்கையராகிய எமது பொறுப்பாகும்.

ஜனவரி மாதத்திற்கு ஜேனஸ் எனும் கடவுளின் பெயர் சூட்டப்பட்டது. அக்கடவளைால் முன்னோக்கி மாத்திரம் அன்றி, பின்னோக்கியும் பார்க்க முடியுமாம்.

அதனால் எதிர்காலம் தொடர்பில் மட்டுமன்றி, கடந்த காலம் தொடர்பிலும் அறிந்து, ஒவ்வொருவரினதும் சவால்களைப் புரிந்துகொள்ள வேண்டும். நாட்டின் முன்னேற்றத்துக்காக எமது பொறுப்புக்களை அறிந்து கொள்வோம். அவற்றை செயற்படுத்தி, தாய் நாட்டை பலப்படுத்துவோம்.

அதற்காக பொறுப்புடனும் அர்பணிப்புடனும் செயற்படுவோம்.இதற்காக புத்தாண்டை செழிப்பானதாக மாற்றிக்கொள்வோம். பிறந்திருக்கும் ஆண்டு, அனைவருக்கும் வெற்றிகரமான ஆண்டாக அமையட்டும்.

## புதிய சிந்தனையுடன் புத்தாண்டை...

அரசியல், சமூக மற்றும் கலாசாரம் துறைகளில் புதியதோர் யுகத்தை உருவாக்கும் சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.அராசாங்கத்தின் வேலைத்திட்டங்களால் இச்சவால்களை வெல்ல முடியும்.இதற்காக அர்ப்பணிப்புடன் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

உணவு மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் எமது விவசாயிகள் ஆற்றிய சவாலான பணியை இப்புத்தாண்டில் நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

புத்தாக்கங்கள் மற்றும் தொழில் முயற்சி சார்ந்த மனப்பான்மையுடன் புதுமையான எண்ணக்கருக்கள் மூலம் புதிய தலைமுறையை வலுவூட்டி, நாட்டை உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி முன்கொண்டு செல்வதற்கு உறுதிபூணுவோம்.

கடந்த காலம் எமக்கு பல விடயங்களை சிந்திக்க வைத்துள்ளது. தொற்று நோய்நிலைமைகள், அனர்த்தங்கள், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் போன்றவை அண்மைக்கால வரலாற்றில் நாம் கண்டிராதவையாகும். மீண்டும் அவ்வாறான நெருக்கடி நிலைமைகளுக்கு முகம்கொடுக்காதிருக்க, அடுத்த தலைமுறைக்கு அவற்றை விட்டுச் செல்லாமலிருக்க, மலரும் இந்த புத்தாண்டை புதிய சிந்தனைகளுடன் வரவேற்போம்.

## தேசிய அபிலாஷைகளை நிறைவேற்ற...

எனவே, அடுத்த ஆண்டு புதிய தேர்தலுக்கு வழி வகுப்பதே முதன்மையான போராட்டமாக இருக்க வேண்டும். நாடு பல பாரிய பொருளாதார மற்றும் அரசியல் இடர்களை எதிர்நோக்கி வரும் இத்தருணத்தில், நாட்டு மக்களின் சாதாரண வாழ்க்கை நிலைமைகளில் கூட பல அசாதாரண சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளன. விவசாயம் மற்றும் தொழில்முயற்சியாளர் சார்ந்த தன்னிறைவு பொருளாதார முறை தற்போதைய

அரசாங்கத்தின் தொலைநோக்கு அற்ற நடவடிக்கைகளால் முற்றிலும் தலைகீழாக மாறியுள்ளது. இந்நிலை மாற வேண்டுமானால்,ஆட்சியாளர்களின் நன்மைகளைப் பற்றி சிந்திக்காமல் மக்களைப் பற்றி சிந்திக்கும் ஆட்சி முறையே நாட்டுக்கு தேவை.

## துறைமுக அதிகார சபை,...

என்பன உள்ளன.பிறந்துள்ள புத்தாண்டில் துறைமுக அதிகார சபையின் வருமானத்தை 100 பில்லியன் ரூபாவாகவும் விமான நிலையத்தின் வருமானத்தை 60 பில்லியன் ரூபாவாக உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2023ஆம் ஆண்டு இலங்கை துறைமுக அதிகாரசபை 70 பில்லியன் ரூபாவையும், விமான நிலையம் 47 பில்லியன் ரூபாவையும் வருமானமாக ஈட்டியுள்ளது. 2024ஆம் ஆண்டில் இவ்விரு நிறுவனங்களின் வருமானத்தை 50 பில்லியன் ரூபாவினால் அதிகரிப்பதே தமது இலக்கு.

இதன்படி, துறைமுகத்தின் கொள்கலன் இயக்கத் திறனை அதிகரிக்க ஜூன் மாதம் கிழக்கு முனைய செயல்பாடுகளைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு 08 புதிய விமான சேவைகள் வரவுள்ளன.இதனால் , தற்போதுள்ள முனையத்தில் பயணிகளின் சன நெரிசலை குறைக்கும் வகையில் 08 பில்லியன் ரூபா செலவில் முனையம் நவீனமயப்படுத்தப்படும் எனவும் துறைமுகங்கள், கப்பல்போக்குவரத்து விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

## அரச நிறுவனங்களில்...

உத்தியோகபூர்வ வைபவம் இன்று முற்பகல் 09.00 மணிக்கு ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

பொதுமக்களுக்கு வினைத்திறனுள்ள அரச சேவையை வழங்குவதற்கு முழு அரச ஊழியர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்பதனால் தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் உள்ளூராட்சி மட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரச நிறுவனங்களிலும் இந்நிகழ்வு நடத்தப்பட வேண்டுமென பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதன்போது அரச ஊழியர்கள் அனைவரும் அரச சேவை உறுதிமொழியை வழங்க வேண்டும் எனவும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சொகுசுக் கார்கள் மோதி...

இவ்விபத்து இடம்பெற்றதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்தில் இரு கார்களிலும் பயணித்த மூன்று சிறுவர்கள் உட்பட 09 பேர் காயமடைந்தனர்.இவர்கள், முந்தல் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் எட்டுப் பேர் மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.இவ்விபத்தில், இரண்டு சொகுசு கார்களும் சேதமடைந்தன.

சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சக்திவாய்ந்த தொடர்...

தலைநகரான ஜெயபுராவில் உள்ள அபேபுராவிற்கு வடகிழக்கே 162 கிலோமீட்டர் தொலைவில் நேற்று (31) அதிகாலை மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

குறித்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.5ஆக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இலங்கையை அண்மித்த இந்தியப் பெருங்கடலிலும் பாரிய நிலநடுக்கம் நேற்று (30) காலை 10.49 மணி அளவில் உணரப்பட்டது.

இதனால் நாட்டைச் சூழவுள்ள கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## லிட்ரோ கேஸ் விலை...

சிலிண்டரின் விலை 500 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது. தற்போது 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர் 3565 ரூபாவிற்கு விற்கப்படும் நிலையில் நாளை முதல் 500 அதிகரிக்கப்பட்டு 4065 ரூபாய்க்கு விற்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இஸ்ரேலுக்கு ஆதரவாக உளவு பார்த்த நால்வருக்கு ஈரான் வழங்கிய தண்டனை இஸ்ரேலுக்கு ஆதரவாக உளவு பார்த்த நால்வருக்கு ஈரான் வழங்கிய தண்டனை இவ்வாறு எரிவாயு விலையின் இந்த சடுதியான அதிகரிப்பினால் உணவுப்பொதிகளின் விலைகளும் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது.

## வருடாந்த அரச வருமானத்தில்...

மீதமுள்ள 262 பில்லியன் ரூபாய்கள் வரி அல்லாத மற்றும் மானியங்களாக உள்ளன.

அரசாங்கத்தின் வருமானம் அதிகரித்துள்ள அதேவேளை, 2023ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் செலவினங்களும் 5252 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக பணிப்பாளர் நாயகம் விளக்கமளித்துள்ளார்.

## பிறந்துள்ள புது வருடத்தில்...

எதிர்வரும் மார்ச் மாதம் இதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும். இவ்வகையில் 2024 ஆம் ஆண்டில் கொழும்பைச் சுற்றி 10, 000 வீடுகள் நிர்மாணிக்கப்படும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

## விமான நிலையத்தில்...

கைது செய்யப்பட்டார்.முதுகுவலியைப் போக்கப் பயன்படும் ஆடையில் புத்திசாலித்தனமாக இவற்றை இவர் மறைத்து எடுத்து வந்துள்ளார். 24 கரட்டுடைய இந்த பிஸ்கட்களின் மொத்த எடை, 7 கிலோ 7 கிராமாகும். இவரிடம் வாக்குமூலங்களைப் பெற்ற பின்னர், தேவையான மேலதிக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சுங்க போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

## பெரிய வெங்காய விலையில்...

நிறுத்தி வைத்துள்ள நிலையில், பாகிஸ்தான், துருக்கி, ஈரான் போன்ற நாடுகளிலிருந்து அதிக அளவில் பெரிய வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள முக்கிய பொருளாதார நிலையங்களில் ஒரு கிலோ பச்சை மிளகாயின் சில்லறை விலை தற்போது 2000 முதல் 2200 ரூபா வரை அதிகரித்துள்ளது.

## கொவிட் 19 ...

தெரிவித்துள்ளனர். இதனால், மக்கள் தமது பாதுகாப்பு தொடர்பில் மிகுந்த அக்கறையுடன் இருக்க வேண்டும் எனவும் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உலகளவில் கொவிட் 19 தொற்றுக்குள்ளான வர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்புக்கள் மீண்டும் அதிகரித்துள்ளன. புதிய கொவிட் 19 திரிபு நாட்டுக்குள் பிரவேசித்துள்ளதை விசேட நிபுணர்களும் , சுகாதாரத் துறையினரும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்தியாவில் தொற்றுநோய் பரவல் அதிகரித்துள்ளதால், அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, ஆபத்தான நிலைமையில்லை எனக் கூற முடியாதுள்ளது.

இவ்விவகாரம் குறித்து அரசு தரப்பில் முறையான விசாரணை நடத்த வேண்டும். பின்னர் சுகாதாரத்துறைக்கு இதுகுறித்து தகவல் தெரிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எவ்வாறாயினும், பொதுமக்களும் இவ்விடயத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுமாறும் மக்கள் கேட்கப் படுகின்றனர்.

# புதிய அணித் தலைவர்களுடன் இலங்கை ஒருநாள், டி20 உத்தேச அணிகள் அறிவிப்பு



சிம்பாப்வேயுக்கு எதிரான எதிர்வரும் ஒருநாள் மற்றும் டி20 தொடர்களுக்கான உத்தேச இலங்கை குழாம்களை இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதில் சிம்பாப்வேயுக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடருக்கான உத்தேச அணியில் அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸ், பானுக்க ராஜபக்ஷ மற்றும் பினுர பெர்னாண்டோ ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஒருநாள் மற்றும் டி20 தொடர்களில் ஆடுவதற்கான சிம்பாப்வே அணி எதிர்வரும் ஜனவரி 3ஆம் திகதி இலங்கை வரவுள்ளது. இதற்கு தேர்வு செய்யப்பட்டிருக்கும் 22 பேர் கொண்ட டி20 உத்தேச அணி மற்றும் ஒருநாள் அணியில் இருந்து இறுதி அணி தேர்வு செய்யப்பட்டு விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவின் ஒப்புதலுக்காக அனுப்பப்படவுள்ளது.

டி20 அணிக்கு வனிந்து ஹசரங்க தலைவராக தெரிவு செய்யப்பட்டிருப்பதோடு உப தலைவராக சரித் அசலங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கடைசியாக 2021 ஆம் ஆண்டிலேயே இலங்கை டி20 அணியில் மத்தியூஸ் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அறிவிக்கப்பட்டிருக்கும் 21 பேர் கொண்ட உத்தேச ஒருநாள் அணியின் தலைவராக குசல் மெண்டிஸ் நியமிக்கப்பட்டிருப்பதோடு அந்த அணிக்கும் சரித் அசலங்க உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை ஒருநாள் உத்தேச குழாம்: குசல் மெண்டிஸ் (தலைவர்), சரித் அசலங்க (உப தலைவர்), பெதும் நிஸ்ஸங்க, அவிஷ்க பெர்னாண்டோ, சதீர சமரவிக்ரம, சஹான் ஆராச்சிகே, நுவனிது பெர்னாண்டோ, தசுன் ஷானக்க, கமிந்து மெண்டிஸ், சாமிக்க கருணாரத்ன, ஜனித் லியனகே, வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷன, டில்சான் மதுஷங்க, துஷ்மன்த சமீர, துனித் வெள்ளாலகே, பிரமோத் மதுசான், அசித பெர்னாண்டோ, அகில தனஞ்சய, ஜெப்ரி வன்டர்செய், சாமிக்க குணசேகர.

இலங்கை டி20 உத்தேச குழாம்: வனிந்து ஹஸரங்க (தலைவர்), சரித் அசலன்க (உப தலைவர்), குசல் மெண்டிஸ், பெதும் நிஸ்ஸங்க, சதீர சமரவிக்ரம, தசுன் ஷானக்க, அஞ்சலோ மத்தியூஸ், பானுக்க ராஜபக்ஷ, குசல் ஜனித் பெரேரா, கமிந்து மெண்டிஸ், சாமிக்க கருணாரத்ன, மஹீஷ் தீக்ஷன, டில்சான் மதுஷங்க, துஷ்மன்த சமீர, துனித் வெள்ளாலகே, பிரமோத் மதுசான், அகில தனஞ்சய, ஜெப்ரி வன்டர்செய், மதீஷ பதிரண, நுவன் துஷார, பினுர பெர்னாண்டோ.

# இலங்கை பயிற்சி குழாத்தில் சந்தன, கண்டம்பி இணைப்பு



சிம்பாப்வேயுக்கு எதிரான எதிர்வரும் ஒருநாள் மற்றும் டி20 தொடர்களுக்கு இலங்கை பயிற்சி குழாத்தில் முன்னாள் வீரர்களான உபுல் சந்தன மற்றும் திலின கண்டம்பி ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அணியின் களத்தடுப்பு திறனை அதிகரிப்பதற்காக களத்தடுப்பு பயிற்சியாளர் அன்டன் ருக்ஸுடன் இணைந்து சந்தன பணியாற்றவுள்ளார். உலகக் கிண்ணத்தில் இலங்கை அணியின் களத்தடுப்பு மோசமாக இருந்ததோடு, அந்தத் தொடரின் ஒன்பது போட்டிகளில் இலங்கை அணி 16 பிடியெடுப்புகளை தவறவிட்டது போட்டி முடிவுகளிலும் தாக்கத்தை செலுத்தியது.

இந்நிலையில் இலங்கை அணியின் திறமைமிக்க முன்னாள் களத்தடுப்பு வீரரான உபுல் சந்தனவை களத்தடுப்பு பயிற்சியாளரிடம் அண்மையில் ஆலோசகராக நியமிக்கப்பட்ட சனத் ஜயசூரியவே பரிந்துரைத்துள்ளார்.

அதேபோன்று நவீட் நவாஸுக்கு பதில் துடுப்பாட்ட பயிற்சியாளராக கண்டம்பி பொறுப்பேற்றுள்ளார். நவாஸ் தொடர்ந்தும் உதவிப் பயிற்சியாளராக செயற்படவுள்ளார். அதேநேரம் பெரிதும் அறியப்பட்ட டில்ஷான் பொன்சேகா பயிற்றுவிப்பாளராக அணியுடன் இணையவுள்ளார்.

இலங்கை வரும் சிம்பாப்வே அணிக்கு எதிரான ஒருநாள் மற்றும் டி20 தொடர்கள் எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதற்காக சிம்பாப்வே அணி ஜனவரி 3ஆம் திகதி இலங்கை வரவுள்ளது.

உபுல் சந்தன இலங்கை அணிக்காக 16 டெஸ்ட் மற்றும் 146 ஒருநாள் போட்டிகளில் ஆடி இருப்பதோடு கண்டம்பி 39 ஒருநாள் மற்றும் 5 டி20 சர்வதேச போட்டிகளில் ஆடியுள்ளார்.


## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 160,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 ஜனவரி 03ஆம் திகதி**

**ஏலவிற்பனையினூடாக வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124D050 | LKA18224G050 | LKA36425A039 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 40,000 | 70,000 | 50,000 | 160,000 |

ஏலவிற்பனைத் திகதி : 2023 ஜனவரி 03
தீர்ப்பனவுத் திகதி : 2023 ஜனவரி 05
வழங்கப்படும் திகதி : 2023 ஜனவரி 05
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 ஜனவரி 03. புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| கொமர்ஷல் பாங் ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள்ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன் வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**


## சர்வதேச செய்திகள்

# காசாவின் எகிப்து எல்லையை கைப்பற்ற இஸ்ரேல் திட்டம்: போர் பல மாதங்களுக்கு நீடிக்கும் வாய்ப்பு

## ரபாவில் அடைக்கலம் பெறும் மக்களுக்கு இடமில்லை

காசாவில் தொடர்ந்து உக்கிர மோதல் நீடிக்கும் நிலையில் எகிப்துடனான காசா எல்லையை மீட்பதாக குறிப்பிட்டிருக்கும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இந்தப் போர் பல மாதங்கள் நீடிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் போர் உச்சத்தை தொட்டிருப்பதாக கடந்த சனிக்கிழமை (30) செய்தியாளர்களிடம் கூறிய நெதன்யாகு, எகிப்துடனான காசாவின் எல்லையை ஒட்டிச் செல்லும் இடை வலயப் பகுதி இஸ்ரேலின் கைகளில் இருக்க வேண்டும் என்றார்.

'அந்தப் பகுதி மூடப்பட வேண்டும். நாம் எதிர்பார்க்கும் இராணுவமயமற்ற நிலையை எட்டுவதற்கு அதைத் தவிர வேறு வழி இல்லை' என்று நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் விரிவாக எதுவும் குறிப்பிடாதபோதும், இது 2005 ஆம் ஆண்டு காசாவில் இருந்து இஸ்ரேல் வாபஸ் பெற்றதை மாற்றும் ஒரு செயலாக அமைவதோடு அது காசா பகுதியை முழுமையாக கட்டுப்படுத்தும் முயற்சியாக இருக்கும்.



காசாவில் இஸ்ரேலிய தரைப்படை தனது தாக்குதல்களை புதிய இடங்களுக்கு விரிவுபடுத்தி வரும் நிலையில் இந்தப் போர் பல மாதங்கள் நீடிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தெற்கு காசாவின் கான் யூனிஸில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் தஞ்சம் அடைந்திருக்கும் பாடசாலை ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேல் நேற்று (31) நடத்திய பீரங்கி தாக்குதல்களில் குறைந்தது 10 பேர் காயமடைந்தனர்.

இஸ்ரேலிய இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை கான் யூனிஸ் மற்றும் ரபா பகுதிகளின் பல இடங்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் அது தெற்கு காசாவில் அண்மைய நாட்களில் தனது படை நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் மத்திய மற்றும் தெற்கு காசாவின் அல் புரைஜ், நுஸைரத், மகாசி மற்றும் கான் யூனிஸ் பகுதிகளை இலக்கு வைத்து கடந்த சனிக்கிழமை இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தியதாக அங்கிருக்கும் குடியிருப்பாளர்கள் மற்றும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் மத்திய காசாவில் உள்ள அகதி முகாம்களில் இஸ்ரேல் சனிக்கிழமை இரவு முழுவதும் நடத்திய வான் மற்றும் பீரங்கி தாக்குதல்களில் 25 பேர் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

மேலும் தெற்காக எகிப்தை ஒட்டிய எல்லை நகரான ரபாவில் பெரும் எண்ணிக்கையான மக்கள் இஸ்ரேலின் தாக்குதலில் இருந்து பாதுகாப்புப் பெற அடைக்கலம் பெற்றபோதும் அங்கும் பலஸ்தீன போராளிகளுடன் மோதல் நீடித்து வருகிறது.

'இந்தப் போர் போதும்! நாம் முற்றிலும் களைப்படைந்துவிட்டோம்' என்று கான் யூனிஸில் உள்ள தனது விட்டில் இருந்து தப்பி வந்து ரபாவில் அடைக்கலம் பெற்றிருக்கும் 49 வயது அபூ கத்தர் தெரிவித்தார்.

'இந்த குளிரான காலநிலைக்கு இடையே நாம் ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து வருகிறோம். குண்டுகள் இரவு, பகல் பாராது எம்மீது விழுகின்றன' என்றும் அவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவத்திடம் கூறினார்.

இஸ்ரேலின் வான் தாக்குதல் ஒன்றில் ஹமாஸ் ஆயுதப் பிரிவின் மூத்த உறுப்பினர் ஒருவரான அப்தல் பத்தா மாலி கொல்லப்பட்டதை அந்த அமைப்பு உறுதி செய்துள்ளது. மேற்குக் கரையைச் சேர்ந்த அவர் 2011 கைதிகள் பரிமாற்றத்தின்போது காசாவுக்கு வெளியேற்றப்பட்டிருந்தார். மறுபுறம் காசாவில் கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 172 ஆக உயர்ந்துள்ளது. இதில் காயமடைந்த 431 இஸ்ரேலிய இராணுவத்தினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் 44 பேர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலை அடுத்து ஆரம்பமான இந்தப் போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 21,672 ஆக அதிகரித்துள்ளது. இதில் மேலும் 56,165 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

**ரபாவில் குவியும் மக்கள்**

காசாவின் குறுகிய நிலப்பகுதியின் 2.3 மில்லியன் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட அனைவரும் போல் தமது விடுகளை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கும் நிலையில் இடம்பெயர்ந்த பெரும்பாலான மக்கள் பூங்காக்களின் திறந்த பகுதிகளில் தங்கி இருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிவாரண அமைப்பின் ஜூலியட் டூமா தெரிவித்துள்ளார். எகிப்துடனான எல்லைப் பகுதியாக உள்ள ரபாவுக்கு கடந்த சில நாட்களில் குறைந்தது 100,000 பேர் தப்பி வந்திருப்பதாக ஐ.நாவின் மனிதாபிமான அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. எனினும் ஐ.நாவால் மட்டுப்படுத்தப்பட்ட உதவிகளையே இவர்களுக்கு வழங்க முடியுமாக உள்ளது என்று டூமா குறிப்பிட்டுள்ளார். எனினும் காசாவின் மனிதாபிமான தேவைகள் பாரிய அளவில் அதிகரித்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

உதவிகள் செல்வதை கட்டுப்படுத்தவில்லை என்று இஸ்ரேல் கூறியபோதும் அதன் உக்கிர தாக்குதல்கள் உதவி விநியோகத்திற்கு இடையூறை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் ரபாவில் இருந்து பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு பேசிய ஐ.நா நிவாரண அமைப்பின் காசா பணிப்பாளர் டொம் வைட், இந்த நகரில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் அடைக்கலம் பெற்றிருப்பதாக தெரிவத்தார். பாடசாலைகள் மற்றும் மாநகர சபை வசதிகள் என்று ரபாவில் உள்ள அனைத்து இடங்களிலும் அளவுக்கு அதிகமான மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் நிலையில் அங்கு மேலும் மக்கள் அடைக்கலம் பெறுவதற்கான இடம் தீர்ந்துவிட்டதாக டொம் வைட் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயிரக்கணக்கான மக்கள் தற்போது திறந்த வெளியில் உறங்கி வருவதாக டூமா வழங்கிய கூற்றை பிரதிபலிப்பதாக இது உள்ளது. தெற்கு மற்றும் மத்திய காசாவில் உக்கிரமடைந்திருக்கும் தாக்குதல்கள் காரணமாகவே ரபா பகுதியை நோக்கி மக்கள் படையெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் காசாவில் இடம்பெயர்ந்துள்ள மக்களிடையே தொற்று நோய்கள் பரவும் அச்சுறுத்தல் பற்றி உலக சுகாதார அமைப்பு மீண்டும் ஒருமுறை எச்சரித்துள்ளது.

காசாவில் கடந்த ஒக்டோபர் நடுப்பகுதியில் இருந்து டிசம்பர் நடுப்பகுதி வரையான காலத்தில் நோய் பரவல் அதிகரித்திருப்பதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டொக்டர் டெட்ரொஸ் அதனொம் கெப்ரியேசுஸ் குறிப்பிட்டுள்ளார். காசா பகுதியில் உள்ள முகாம்களில் சுமார் 136,400 வயிற்றுப்போக்கு, 55,400 சொறி மற்றும் சிரங்கு மற்றும் 126 மூளைக்காய்ச்சல் சம்பவங்கள் பதிவாகி இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**பிராந்திய பதற்றம்**

இந்தப் போர் பிராந்தியத்தில் பரவும் அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக லெபனான், ஈராக், சிரியா மற்றும் யெமனில் உள்ள ஈரான் ஆதரவு போராட்டக் குழுக்கள் இஸ்ரேல் மற்றும் அதன் கூட்டாளியான அமெரிக்காவை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

சிரியாவில் இஸ்ரேல் நடத்தியதாக சந்தேகிக்கப்படும் வான் தாக்குதல்களில் 23 பேர் கொல்லப்பட்டாக மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. சிரியாவின் அல் பொகாமால் பகுதி மீது நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தத் தாக்குதல்களில் ஈரான் ஆதரவு ஆயுதக் குழுவைச் சேர்ந்தவர்களே கொல்லப்பட்டிருப்பதாக பிரிட்டனைத் தளமாகக் கொண்ட அந்த மனித உரிமை அமைப்பு கூறியுள்ளது.

முன்னதாக சிரியாவின் அலெப்போ நகரை இலக்கு வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.


## பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2023/12/31 திகதிக்கு காலாவதியாகும் இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2024/01/18 மற்றும் 2024/01/19 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577










## மானுடவியல்



147

அடியாரின் அழுக்கேறிய கச்சையைக் கண்டதும் திருக்குறிப்புத் தொண்டர் "ஐயா, தங்களுடைய கச்சை மிகவும் அழுக்காக உள்ளது. நான் இதனை உங்களுக்கு நன்கு சலவை செய்து தூய்மையாக்கி தருகிறேன். ஆதலால் அதனைத் தருகிறீர்களா?" என்று பணிவுடன் வினவினார்.

சிலநாட்களாக மழை ஓய்ந்து இருந்தபடியால் எப்படியும் பொழுது சாய்வதற்குள் சலவை செய்து உலர்த்தி அடியாரிடம் தந்துவிடலாம் என்ற நம்பிக்கை திருக்குறிப்புத் தொண்டருக்கு இருந்தது.

திருக்குறிப்புத் தொண்டர் கூறியதைக் கேட்டதும் சிவனடியார் "அழுக்காக இருந்தாலும் இதுதான் எனக்கு கவசம். இந்த குளிர்காலத்தில் என்னுடைய உடலைப் போர்த்திக் கொள்ள இது பயன்படும். இதனைக் கொடுத்துவிட்டால் நான் இரவில் குளிரில் நடுங்க நேரிடும்." என்றார்.

"ஐயா, நான் இரவு வருவதற்குள் இதனை சலவை செய்து உலர்த்தி உங்களுக்கு போர்த்திக் கொள்ள தயாராக தருகிறேன்." என்று அடியவருக்கு தம்மால் ஆன தொண்டைச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் திருக்குறிப்புத் தொண்டர் கெஞ்சினார்.

"இரவு வருவதற்கு முன் இதனை சலவை செய்து உலர்த்தி தருகிறேன் என்று உறுதியளிப்பாதால் இதனைத் தருகிறேன். கண்டிப்பாக உலர்த்தித் தந்துவிட வேண்டும்." என்றபடி திருக்குறிப்புத் தொண்டரிடம் அழுக்குக் கச்சையைக் கொடுத்தார்.

அதனை பெற்றுக் கொண்ட திருக்குறிப்புத் தொண்டர் நேரே சலவை செய்யும் இடத்திற்குச் சென்றார். வெள்ளாவியில் அழுக்குக் கச்சையை வேக வைத்தார். பின்னர் அதனைப் பிரித்து கச்சையை சலவை செய்ய ஆரம்பித்தார்.

அப்போது எதிர்பாராத வண்ணம் மேகங்கள் திரண்டு கருத்தன. முற்பகல் வேளையும் பிற்பகல் போல் இருந்தது. மழை கொட்டத் தொடங்கியது.

அதனைக் கண்டதும் திருக்குறிப்புத் தொண்டர் 'இன்னும் சற்று நேரத்தில் மழை நின்று வானம் வெளுக்கும். அதுவரைப் பொறுத்திருப்போம்.' என்று தம்மைத் தாமே தேற்றினார்.



ஆனால் மழை நிற்கவில்லை. அடைமழை பெய்ய ஆரம்பித்து விட்டது.பொழுது போய்க் கொண்டே இருந்தது. நேரம் செல்ல செல்ல திருக்குறிப்புத் தொண்டரின் உள்ளத்தில் புயல் புகுந்தது.

'ஐயோ, இதனை முன்பே வெளுத்துக் கொண்டு போய் வீட்டில் காற்றாட உலர்த்தியிருக்கலாமே. நான்தான் சரியாகிவிடும் என்று நேரத்தைக் கடத்தி விட்டேன். *(தொடரும்)*

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# தன்னுள் இராமர் இருப்பதை நெஞ்சை பிளந்து காட்டிய ஆஞ்சநேயர்



14 ஆண்டு கால வனவாசம் முடிந்து அயோத்தி திரும்பிய ராமனுக்கு பட்டாபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. அயோத்தி நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது.

ராமனின் பெயரில் 14 ஆண்டுக் காலம் ஆட்சி செய்த பரதனின் ஆட்சியின் கீழ் மக்கள் எந்த ஒரு குறையும் இல்லாமல் வாழ்ந்தார்கள் என்றாலும், ராமன் பட்டாபிஷேக தினத்தில் தான் மக்களின் முகத்தில் உண்மையான மகிழ்ச்சியும் ஆனந்தமும் வந்தது. ஸ்ரீ ராமனும், சீதா தேவியும் அரியணையில் அமர்ந்திருக்க, ராமனின் பாதத்தில் அடக்கத்தோடு அனுமன் அமர்ந்திருந்தார். அங்கதனோ உடைவாள் ஏந்தியிருந்தார். ராமனுக்கு வெண்கொற்றக் குடையை பரதன் பிடித்திருந்தார்.

லட்சுமணனும், சத்துருக்கனனும் வெண் சாமரம் வீசிக் கொண்டிருந்தனர்.பெரியவர்கள் மகுடத்தை எடுத்து கொடுத்த, ரகு குல குருவான வசிஷ்ட முனிவர் மகுடத்தை ராமபிரானுக்கு சூட்டினார்.

ஸ்ரீ ராமன் அரசனானதால் மக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். தன் காலடியில் இருந்த அனுமனைப் பார்த்து ராமபிரான், 'உன்னுடைய உன்னத அன்பை நான் எப்படி விவரிப்பேன். உதவி செய்வதில் உன்னைப் போல யாரையும் ஒப்பாக சொல்ல முடியாது. உன்னுடைய அன்பை எதாலும் அளக்க முடியாது. உன்னைப் போல கைமாறு பார்க்காமல் உதவக்கூடியவர் யாரும் இல்லை. உன் உதவிக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன். என் அன்பைத் தவிர விலை உயர்ந்ததை என்னால் தர இயலாது' என அனுமனை தன் மார்போடு கட்டி அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டார். அனுமனின் உதவியையும், திறமையையும் பாராட்டி அவருக்கு ஒரு பரிசளிக்கும் விதமாக ஒளி வீசக்கூடிய முத்துமாலை ஒன்றை பரிசாக அளித்தார். ஆனந்தத்துடன் பெற்றுக்கொண்ட அனுமன், முத்துமாலையை ஒவ்வொன்றாகப் பிய்த்து ஒவ்வொரு முத்தாக கடித்து உடைக்கத் தொடங்கினார். இதைப் பார்த்து சபையில் இருந்தவர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர்.

அனுமனுக்கு பித்துப் பிடித்துவிட்டது என ஒவ்வொருவரும் ஒருவிதமாக பேசத் தொடங்கினர். ஆனால் அனுமன் ஏன் அப்படி செய்தார் என்பதை ராமனுக்கு நன்றாகவே தெரியும். இருப்பினும் அவனின் பக்தியை பறைசாற்ற, அனைவரின் முன்னிலையில் 'அனுமனே ஏன் இப்படி செய்தாய்?' என கேட்டார். அதற்கு அஞ்சனை மைந்தனோ 'பிரபு உங்கள் மீது அளவு கடந்த பாசம் வைத்துள்ள சீதா தேவி கொடுத்த முத்து மாலையில் உங்களின் இருவரின் உருவம் இருக்கும் என நினைத்து அதை ஒவ்வொன்றாக உடைத்துப்பார்த்தேன். ஆனால் அதில் ஒன்றில் கூட உங்களின் திரு உருவம் இல்லை.

உங்களின் திருவுருவோ, பெயர் சொல்லாத எந்த பொருளும் எனக்கு தேவையில்லை என கூறினார். இதைக் கேட்ட சபையில் இருந்தவர்கள், முத்துமாலையை மாசுபடுத்தியதை நியாயப்படுத்த இப்படி ஒரு காரணத்தை சொல்வதாக கூறினர். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ராமனோ, 'அப்படியானால் எப்போதும் என்னை நினைத்துக் கொண்டிருப்பதாக கூறும் நீ, உன்னுள் நானிருப்பதை நிரூபித்துக் காட்ட முடியுமா?' என கேள்வி எழுப்பினார். அனுமன் வசமாக மாட்டிக் கொண்டதாக அனைவரும் நினைத்த நிலையில், என்னுள் ஸ்ரீ ராமன் இருப்பதை இப்போதே என நெஞ்சப் பிளந்து காட்டி அதில் ஸ்ரீ ராமனும், சீதா தேவியும் இருப்பதை காட்டினார். அப்போது அனைவரும் அனுமனின் எல்லையற்ற அன்பை கண்டு வியந்தனர்.




## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19484) தசரதனின் குலகுரு யார்?** வசிஷ்டர்

**19485) அருந்ததியின் கணவர் யார்?** வசிஷ்டர்

**19486) திருமால் எடுத்த அவதாரங்களில் மனிதனாக வாழ்ந்தவர் யார்?** ராமன்

**19487) ராமாயணத்தின் கதாநாயகன் யார்?** ராமன்

**19488) ராமனின் மனைவி யார்?** சீதா

**19489) சீதாவுக்குரிய வேறு பெயர்?** ஜானகி

**19490) ஜானகிக்குரிய வேறு பெயர்?** வைதேகி

**19491) வைதேகிக்குரிய வேறு பெயர்?** ஜனகநந்தினி

**19492) ஜனகநந்தினிக்குரிய வேறு பெயர்?** ஜனககுமாரி

**19493) ஜனககுமாரிக்குரிய வேறு பெயர்?** மைதிலி

**19494) விச்ரவா என்பவரின் மகன் யார்?** ராவணன்

**19495) குபேரனின் தம்பி யார்?** ராவணன்

**19496) புலஸ்திய முனிவரின் பேரன் யார்?** ராவணன்

**19497) ராமபிரானின் தம்பி யார்?** லட்சுமணன்

**19498) சுமித்திரையின் மூத்த மகன் யார்?** லட்சுமணன்

**19499) ராமனுக்கு பணிசெய்வதற்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்தவன் யார்?** லட்சுமணன்

**19500) ராமனின் தந்தை யார்?** தசரதன்

**19501) ராமரின் காலடி பட்டு சாபம் நீங்கப்பெற்றவள் யார்?** அகல்யை

**19502) வாலி தாரையின் மகன் யார்?** அங்கதன்

**19503) கிஷ்கிந்தையின் இளவரசன் யார்?** அங்கதன்

**19504) ராவணனின் மகன் யார்?** இந்திரஜித்

**19505) மேகநாதன் என்ற பெயர் கொண்டவன் யார்?** இந்திரஜித்

**19506) லட்சுமணனால் அழிந்தவன் யார்?** இந்திரஜித்

**19507) ராவணனின் தம்பிகள் யார்?** கரன் மற்றும் தூஷணன்

**19508) ராமனின் கையால் அழிந்தவர்கள் யார்?** கரன் மற்றும் தூஷணன்

**19509) ஜனஸ்தானம் என்ற இடத்திற்கு அதிபதிகள் யார்?** கரன் மற்றும் தூஷணன்

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 69



செல்வ செழிப்புடன் வாழ விரும்புபவர்கள், கடவுளின் கிருபையை பெற வேண்டும். அந்த கடவுளின் கிருபையை பெற, ஆதாரமாக இருப்பது ஆண்மை பொருந்திய உழைப்பு மட்டுமே. அனைத்தும் துறந்து ஆண்மையுடன் கூடிய உழைப்பை மேற்கொண்டவனுக்கு, கடவுள் அருள்வார் அல்ல அருளியே தீர வேண்டும். எனவே உழைப்பை பராமாத்மா விரும்புவார். உழைத்தவர் உயர்வார். உழைப்பது அவமானமல்ல. எவனொருவன் உழைப்பை நம்பி, திட்டமிட்டு, உறுதியுடன் செயல்படுகிறானோ, அவன் மஹான் எனப் போற்றப்படுவான். இப்படிப் பட்டவனைத் தான் இவ் உலகம் தேடுகிறது.

தகுதியுடையவனே வெகுமதி பெறுகிறான். இது ஒரு தெய்வ நெறியாகும். 'எந்த ஒரு கோட்பாடும் கடவுளால் உருவாக்கப்பட்டு அவராலே செயல் வடிவம் பெறும்' என்பதே இறைச் சட்டம். இதை கடவுளே பின்பற்றவும் செய்ய வேண்டும். அவ்வாறு அவர் பின்பற்றாமல் போனால் இந்த பிரபஞ்சம் செயல்பட முடியாது. ஒரு கோட்பாட்டை உருவாக்கிக் கொண்டு அதை அலட்சியப்படுத்துவதோ அல்லது மீறுவதோ மானமுள்ள செயலாகாது. படைப்பு என்னும் சக்கரம் கோட்பாடு என்னும் அச்சாணியின் உதவியால் தான் சுழன்று கொண்டிருக்கிறது. அந்த கோட்பாட்டை உருவாக்கிய கடவுளே அதனை மீற முடியாது. அப்படி மீறிவிட்டால் அந்த கோட்பாடு அர்த்த மற்று போகும்.

உழைப்பவனை உயர்த்த வேண்டும் என்பது கடவுளின் கோட்பாடு. அந்தக் கோட்பாட்டின்படி உழைப்பவன் அதற்குரிய ஊதியம் பெற்றடைவான். ஆண்மை பொருந்திய உழைப்பாளியை கைதூக்கி விடும் கட்டாயம் கடவுளுக்கு இருக்கிறது. கடவுளின் ஆதரவு உழைப்பவனுக்கு இருக்கும் போது எந்த சக்தியும், அரசும் அதை தடுக்க முடியாது. ஆண்டவன் கட்டளைக்கு முன் அரச கட்டளை அடிபணியும்.



கொழும்பு, புறக்கோட்டை குணசிங்கபுர சிவன் ஆலயத்தின் தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றது. *(படம்: கொழும்பு வடக்கு நிருபர்)*

# இறம்பொடையில் ஸ்ரீ ஹனுமன் ஜெயந்தி லக்ஷார்ச்சனை விழா

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

இறம்பொடையில் உள்ள இலங்கை சின்மயா மிஷனின் ஸ்ரீ பக்த ஹனுமான் ஆலயத்தில் ஸ்ரீ ஹனுமன் ஜெயந்தி லக்ஷார்ச்சனை விழா நிகழும் சர்வ மங்களகரமான சோபகிருது வருடம் மார்கழி 25 ஆம் நாள் 10.01.2024 புதன் கிழமை சதுர்தசி திதியும் மூல நட்சத்திரமும் கூடிய சுப தினத்தில் நடைபெறவுள்ளது. அன்று இவ்வாலயத்தில் ஸ்ரீ ஆஞ்சநேய, பெருமானுக்கு ஜெயந்தி விழா சிறப்பாக நடைபெற இறைவன் திருவருள் கைகூடியுள்ளது. அதனை முன்னிட்டு சோபகிருது வருடம் மார்கழித் திங்கள் 14ம் நாள் 30.12.2023 முதல் 09.01.2024 வரை ஸ்ரீ பக்த ஹனுமனுக்கு லக்ஷார்ச்சனை விழா சிறப்பாக நடைபெறவிருக்கின்றது.

30.12.23 மாலை 3.30 மணிமுதல் விநாயகர் வழிபாடு, அனுக்ஞை, விசேட அபிஷேகம், தீபாராதனை என்பன நடைபெறும். 31.12.2023 முதல் 08.01.2024 வரை தினமும் காலை பூஜை 9.30 மணிக்கும் மாலை பூஜை 4.00 மணிக்கும் ஆரம்பமாகும். 09.01.2024 லக்ஷார்ச்சனை பூர்த்தியன்று காலை 8.30 மணி முதல் உபசாரஹோரமம், தாரா ஹோரமம், மஹா பூர்ணாகுதி விசேட பூஜை என்பன நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும்.

# தை மாதத்தின் சிறப்பு

நம் நாட்டில் பொதுவாக எந்த ஒரு நல்ல செயலையும் தை மாதத்தில் ஆரம்பிப்பது வழக்கம்.

இம்மாதத்தில் தான் சூரியன் தன்னுடைய வடதிசை பயணத்தை தொடங்குகிறார்.

உத்திராண்ய காலம் ஆரம்பமாகிறது.

தேவர்களின் உலகிற்கு தட்சிணாயனம் எனப்படும் ஆறு மாத இரவுக் காலம் முடிந்து, உத்தராயனம் எனும் ஆறு மாதப் பகல் காலம் ஆரம்பமாகும் மாதம் என்பதே தை மாதத்தின் பெருமையாகும். அப்போதுதான் பித்ருக்கள் உலகின் கதவும் திறக்கப்படுகிறது.

ஆடி மாதத்தில் விதைத்த நெல்லானது தை மாதத்தில் தான் அறுவடை செய்யப்படுகிறது.

எனவே இது அறுவடை மாதம் என்றும் அழைக்கப்படுகிறது.

அறுவடையால் மகிழ்ச்சி மிகுந்த மக்கள் தங்கள் கடவுள்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக இம்மாதத்தில் பல்வேறு விழாக்களைக் கொண்டாடுகின்றனர்.

பல்வேறு வழிபாட்டு முறைகளும் இம்மாதத்தில் பின்பற்றப்படுகின்றன.



கொழும்பு, ஜிந்துபிட்டி, ஜெயந்திநகர் ஸ்ரீ சிவசுப்பரமணிய கோவிலில் ஆருத்திரா தரிசனம் அண்மையில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள். *(படம்: கொழும்பு வடக்கு நிருபர்)*

# கிழக்கின் குரல்



# கல்லடியில் சுவாமி விவேகானந்தரின் சிலைக்கு இன்று அடிக்கல் நடும் விழா

## மாவட்ட செயலாளர் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் பங்கேற்பு



( காரைதீவு குறூப் நிருபர் )

மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் இன்று (01) சுவாமி விவேகானந்தி ரின் சிலைக்கு அடிக்கல் நடப்பட வுள்ளது. இந்நிகழ்வு, மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமை யாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் நடைபெறு கிறது.

மட்டக்களப்பு மாவட்ட செயலா ளர் மற்றும் அதிகாரிகளும் இந்நிகழ் வில் பங்கேற்கின் றனர். ஸ்ரீ ராமகி ருஷ்ண மிஷனின் நூற்றாண்டு நிறைவு விழாத்தொடரை ஆரம்பித்து வைக்குமு கமாக, துறவி சுவாமி விவேகானந்தரின் சிலைக்கு அடிக்கல் நடப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுவாமி விவேகானந்தரின் நினைவு தினத்தை முன்னிட்டு அன்னாருக்கு மட்டக்களப்பு கல்லடியில் சிலை வைக் கப்பட உள்ளது.

இதனைத் தொடர்ந்து கல்பதரு தினத்தின் அடுத்த நிகழ்வாக, கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக் களம் ராமகிருஷ்ண மிஷன் உடன் இணைந்து நடத்தும் தையல், மனை யியல் மற்றும் கைவினைப் பொருள் பயிற்சி நெறி அங்குரார் பண வைபவம் கிரானில் நடைபெறுகிறது.

இந்த நிகழ்வு கிரான் கோறளைப் பற்று தெற்கு பிரதேச செயலாளர் எஸ். ராஜ்பாபு தலைமையில் நடைபெறும். பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு இரா மகிருஷ்ண மிஷன் பொது முகாமையா ளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் மற்றும் உதவி பொது முகாமை யாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்த ஜீ மகராஜ் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர்.

சிறப்பு அதிதியாக உதவி பிரதேச செயலாளர் எஸ்.யோகராஜா கலந்து சிறப்பிக்கிறார்.

# இலக்கிய போட்டியில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு

(காரைதீவு குறூப் நிருபர்)



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் திருக்கோவில் பிரதேச செயலகம் நடத்திய இலக்கிய போட்டியில், வெற்றி பெற்றோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வுகள் திருக்கோவில் பிரதேச செயலாளர் திரு.தங்கையா கஜேந்திரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.நிரோஜினி தவநீதன்,நிகழ்வை ஒருங்கமைத்தார். இந்நிகழ்வில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் ,கந்தவனம் சதிசேகரன் மற்றும் இலக்கிய போட்டியில் வெற்றி பெற்ற வெற்றியாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# கரடி தாக்கியதில் தந்தை, மகன் காயம் திருக்கோவில் பகுதியில் சம்பவம்

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

திருக்கோவில் ரூபஸ்குளம் காட்டுப் பகுதியில், விறகு வெட்டச் சென்ற தந்தையும் மகனும் கரடி தாக்கியதில் கடுங்காயங்களுக்கு உள்ளாகினர். இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இவர்களின் தலை, கழுத்து, கால் மற்றும் கைகளில் பாரிய காயங்கள் ஏற்பட்டுள்ளன. காயங்களுக்குள்ளான இருவரும்,பிரதேசவாசிகளின் உதவியுடன் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப் பட்டனர். பின்னர்,அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலைக்கு இவர்கள் எடுத்துச் செல்லப்பட்டனர். அண்மைக்காலமாக திருக்கோவில் பிரதேசத்தில் பொது மக்கள் கரடித் தாக்குதலுக்குள்ளாவது அதிகரித்து வருவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. திருக்கோவில் 04 காயத்திரி கிராமத்தைச் சேர்ந்த 45 வயது தந்தையும் 26 வயது மகனுமே இவ்வாறு கரடி தாக்கி கடுங்காயங்களுக்கு உள்ளாகினர்.

# தன்னலமற்ற தொண்டு நாட்டின் பொருளாதாரத்துக்கு பலம் சேர்க்கும்

## தொழில் அதிபர் அண்ணாச்சி

(ஆரையம்பதி தினகரன் நிருபர்)

பிறந்திருக்கும் (2024) புத்தாண்டு சவால்களை வென்று முன்னேற்றப் பாதைக்கு வழி விடட்டும் என,மட்டக்களப்பு மாவட்ட தொழில் அதிபர்களில் ஒருவரும் சமூக ஆர்வலருமான சண்முகம் சிவபாத சுந்தரம் (அண்ணாச்சி ) தெரிவித்துள்ளார். புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் அவர் தெரிவித்துள்ளதாவது:

பிறந்துள்ள புத்தாண்டை பெருமனதுடன் வரவேற்கிறேன்.இளைஞர்களின் எதிர்காலத்துக்கு ஒளியேற்றும் ஆண்டாக இது அமையட்டும். கல்வித்துறையில் முன்னேறி, நவீன சவால்களை வெல்வதற்கு இந்த ஆண்டு வழிகாட்டட்டும்.எமது நாட்டின் முன்னேற்றத்துக்கு பல விடயங்கள் தடையாக உள்ளன. பொருளாதாரத்தில் முன்னேறுவதனூடாக இத்தடைகளை தகர்த்து எறியலாம்.நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையில் நாட்டின் அபிவிருத்திக்கு,

நாம் பங்களிப்பது அவசியம். எமது மக்களின் வாழ்வாதாரத்துக்கு உந்து சக்தியாக இருந்து பணியாற்ற இப்புத்தாண்டில் உறுதிபூணுவோம். தன்னலமற்ற சேவையே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உதவும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# திருகோணமலையில் பட்டிமன்ற நிகழ்வு



(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக வாசகர் வட்டம் ஏற்பாடு செய்த பட்டிமன்ற நிகழ்வு (28) வியாழக்கிழமை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வாசகர் வட்டத்தின் தலைவர் சரவணப ஆனந்தம் திருச்செந்தூரன் நிகழ்வுக்கு தலைமை தாங்கினார்.பிரதம விருந்தினராக திருகோணமலை நகராட்சி மன்றத்தின் செயலாளர் வெ. இராஜசேகர், சிறப்பு விருந்தினராக சனசமூக உத்தியோகத்தர் எஸ். முரளிதரன், கௌரவ விருந்தினராக தமிழகத்தின் முன்னணி பட்டிமன்ற பேச்சாளர் முனைவர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பட்டிமன்றத்தை நடுவராக தலைமையேற்று கலையமுதன் நடாத்தியிருந்தார்.

இந்நிகழ்வில், கவிஞர் க.யோகானந்தம், கவிஞர் கலாநிதி செ.ஞானராசா, அதிபர் சந்திரகலா, கவிஞர் பவித்ரன், கவிச்சுடர் சிவரமணி, செல்வி பாத்திமா தாஹிரா முஹம்மது சித்தீக் ஆகியோர் பேச்சாளர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

# வைரஸ் காய்ச்சலால் குடும்பஸ்தர் மரணம்

(மண்டூர் தினகரன் நிருபர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தளவாய் பிரதேசத்தை சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர்,வைரஸ் காய்ச்சலால் உயிரிழந்தார்.

அம்மன் வீதி தளவாய் செங்கலடி பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான (33) வயதுடைய முத்துலிங்கம் தர்சன் என்பவரே, இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

கடும் காய்ச்சல் மற்றும் வாந்திபேதியால் இவர்,ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். பின்னர், மேலதிகசிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த (29) இவர் உயிரிழந்தார். ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக்கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி, சடலத்தை பார்வையிட்டார்.

# அம்பாறை பொலிஸில் பழைய வருடத்தை வழியனுப்பும் நிகழ்வு



அம்பாரை தலைமையக பொலிஸ் நிலையத்தின் இவ்வாண்டிற்கான இறுதி சம்பிரதாய பூர்வமான நிகழ்வுகள் நேற்று (31) பொலிஸ் நிலைய உள்ளக மைதானத்தில் மழை மற்றும் வெயில் மத்தியில் இடம்பெற்றன .

அம்பாறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் 1 எஸ்.பி.எச்.செனவிரட்ன மேற்பார்வையில் அம்பாறை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.எம்.ஏ.கே. ஹேரத் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டார். அதன் பின்னர் வாகனப் பேரணிகளையும் அவர் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிஸ் பரிசோதகர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், இந்நிகழ்வில் சவளக்கடை சம்மாந்துறை, பெரியநீலாவணை, காரைதீவு சாய்ந்தமருது உட்பட அம்பாறை மாவட்டத்தின் 23 பொலிஸ் நிலைய பொலிஸாரும் இணைந்திருந்தனர்.



புரவலர் ஹாசிம் உமர் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வுயொன்றில் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எப்.றிபாஸுக்கு, நந்தவனம் சஞ்சிகை வழங்கப்பட்டது.இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் சஞ்சிகையை வழங்குகிறார்.

(படம்,திராய்க்கேணி தினகரன் நிருபர்

# பொத்துவில் தொகுதி அமைப்பாளராக நியமனம்

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

ஐக்கிய மக்கள் சக்தி பொத்துவில் தொகுதி அமைப்பாளராக, எம்.ஐ. ஏ.ஆர்.புகாரி நியமிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி தலைவரும் எதிர் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச அண்மையில் இவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கினார். எம்.ஐ.ஏ.ஆர்.புகாரி, ஓய்வு பெற்ற இலங்கை திட்டமிடல் சேவையின் முதலாம் தர அதிகாரி ஆவார்.அக்கரைப்பற்றைச் சேர்ந்த இவர் சிரேஷ்ட அமைச்சரகளது ஆலோசகராகவும், இணைப்புச் செயலாளராகவும் கடமையாற்றிய அனுபவமுடையவர் ஆவார்.

# குப்பை மேடு சரிந்ததில் போக்குவரத்து பாதிப்பு

(ஆரையம்பதி தினகரன் நிருபர்)

காத்தான்குடியிலுள்ள குப்பை மேடு சரிந்து விழுந்துள்ளதால்,மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதுடன் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.காத்தான்குடி 167 / B கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட ஏ. எல்.எஸ். மாவத்தை அலியார் சந்தியில் உள்ள குப்பையே சரிந்து விழுந்துள்ளது. கழிவுகளை கால்நடைகள் தின்று அசிங்கப்படுத்துவதுடன் வீடுகள் மற்றும் வீதிகளில் குப்பைகளை காகங்கள் கொண்டு வந்து கொட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.கழிவுகளை முறையான விதத்தில் முகாமைத்துவம் செய்திருந்தால் இவ்வாறான நிலைமை, ஏற்பட்டிருக்காதென பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில்,நவடிக்கை எடுக்க அதிகாரிகள் முன்வர வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பாலர் பாடசாலை விடுகை விழா



அக்கரைப்பற்று ஏஸ் முன்பள்ளி பாலர் பாடசாலையின் விடுகை விழா, அண்மையில் அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மஹாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. ஏஸ் கழகத்தின் தலைவர் செய்னுலாப்தீன் தலமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், முஸம்மில் பாத்திமா மன்ஸிஹாவுக்கு அதிதிகளில் ஒருவரான அருட்கவி அக்கறையூர் அப்துல்குத்தூஸ் சான்றிதழ் வழங்குவதை காணலாம்

(இறக்காமம் தினகரன் நிருபர்)

# ஒழுக்கமுள்ள சமூகத்தை தோற்றுவிக்கும் கலந்துரையாடல்

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)



இன ஐக்கியம், ஒழுக்கமான சமுதாயத்தை தோற்றுவிக்கும் நோக்குடன் மூன்று நாள் வதிவிடப்பயிற்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்வை அமான் அக்கரைப்பற்று அமைப்பு இந்தோனேசியாவின் அனுசரணையுடன் ஒழுங்குசெய்தது.

திருக்கோவில் பிரதேச செயலக பிரிவிலுள்ள காஞ்சிரங்குடா கால் நடைவளர்ப்பு பயிற்சி நிலையத்தில், இவ்வதிவிடப் பயிற்சி நடத்தப்பட்டது.

அமைப்பின் தலைவர் யு.எல்.எம்.ஹாஷிம் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமில், அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்து தமிழ், முஸ்லிம் இளைஞர் மற்றும் யுவதிகள் பங்கேற்றிருந்தனர். போதைவஸ்து ஒழிப்பு மற்றும் சமய, சமூக நல்லிணக்கம், குறித்த கலந்துரையாடல்கள் இங்கு இடம்பெற்றன.

# காக்காமுனை அல்-மதீனா முன்பள்ளியில் ஆண்டுவிழா









காக்காமுனை அல்மதீனா முன்பள்ளி பாலர் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு பாடசாலை கேட்போர் கூடத்தில் (30) நடைபெற்றது. காக்காமுனை அல்மதீனா முன்பள்ளி பாலர் பாடசாலை ஆசிரியையின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்

இந்நிகழ்வில் கிண்ணியா பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நிகார், உதவிக்கல்வி பணிப்பாளர் சமீம், முன்பள்ளி கள உத்தியோகத்தர் நவாஸ்தீன் மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்று மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். பிரதம அதிதியால் பாடசாலைக்கு சில உதவிகளும் வழங்கப்பட்டன.

# துபாயில் இனிய நந்தவனத்தின் 'இலங்கை சிறப்பிதழ்' அறிமுக நிகழ்வு









இனிய நந்தவனத்தின் 'இலங்கை சிறப்பிதழ்' அறிமுக நிகழ்வு துபாய் லெவேன்டர் நட்சத்திர ஹோட்டலில் சனிக்கிழமை மாலை (30) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் தலைமையில் நடைபெற்றது. நூலின் பிரதிகளை சிறப்பு விருந்தினர்களுக்கு அவர் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் புரவலருக்கு ஏற்பாட்டாளர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்காக பாடுபட்ட சந்திரசேகரன்

## அன்னார் மறைந்து 14 வருடங்கள் நிறைவு

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத்தலைவரும் முன்னாள் அமைச்சருமான பெ. சந்திரசேகரனின் நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. முதன் முதலாக 1980 களின் பிற்பகுதியில் மாற்றுத்தலைமை புதிய சிந்தனைகொண்ட இளைஞர்கள் உருவாகினார்கள். அதன் முன்னணித் தளபதியாக விளங்கியவர் சந்திரசேகரன்.

சந்திரசேகரன் தனது காலத்தில் மலையகத் தமிழ் மக்களின் அரசியல் என்பது வடக்கு, கிழக்கு கிழக்கு மக்களின் போராட்டத்துக்கு உறுதுணையானதாக மாற்றமடையும் நிலைமையை உருாக்கினார். அதற்கு அவர் கொடுத்த விலை பெரியது. மலையக மக்களின் மேம்பாட்டுக்காக தன்னை அர்ப்பணம் செய்த சந்திரசேகரன் வடக்கு,கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காகவும் குரல்கொடுத்த ஒரு தேசிய தமிழ்த் தலைவராக உயர்ந்துநின்றார்.

மலையக தமிழ்ச் சமூகத்தின் தனித்துவத்தை வலியுறுத்தியும் ஏனைய சிறுபான்மைச் சமூகங்களோடு இணைந்தும் இலங்கையின் தேசிய அரசியலில் முக்கியமான அரசியல் ஆளுமையாக விளங்கிய சந்திரசேகரன், இந்தியாவுடனான உறவில் அழுத்தமான தடங்களை பதித்ததுடன் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் மிகுந்த நம்பிக்கைக்கு பாத்திரமான மலையக தமிழ்த் தலைவராக இருந்தார்.

தற்போதைய மலையக தமிழ்த் தலைவர்களில் சிலர் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்துடன் தற்போது உறவுகளைப் பேணுகிறார்கள் என்றால் அதற்கான அடித்தளத்தை அமைத்தவர் சந்திரசேகரன் ஆவார். அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களில் மலையக மக்களை ஒன்றிணைக்கும் முன்னரங்கப் போராளியாக அவர் விளங்கினார்.

அமரர் சந்திரசேகரன் 2000 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின்போதும் 2005 ஜனாதிபதி தேர்தலின்போதும் முன்வைத்த பல கோரிக்கைகள் இன்றும் பேசுபொருளாக விளங்குகின்றன.

மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைக்க வேண்டும் என்பது சந்திரசேகரனின் கனவாக இருந்தது. அந்தக் கனவு இன்று பெருமளவுக்கு நிறைவேறியிருப்பதைக் காண்கிறோம். மலையக மக்களின் மேம்பாட்டுக்கு இந்தியாவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்பதை உணர்ந்து செயற்பட்ட சந்திரசேகரன், இந்திய மத்திய அரசாங்கங்களுடன் தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்டதுடன் தமிழக அரசியல் கட்சிகளுடனும் அவற்றின் தலைவர்களுடனும் நல்லுறவைப் பேணினார்.

இந்திய உதவியுடன் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் மலையக மக்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று இந்திய முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கை சந்தித்து சந்திரசேகரன் வலியுறுத்தினார்.

'நாடற்றவர் என்ற கருத்தாக்கமும் லயன் குடியிருப்பும் இல்லாதொழிக்கப்படவேண்டும்' என்று சந்திரசேகரன் 2000 ஆம் ஆண்டளவில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தச் செய்த பிரகடனம் 2003 ஆம் ஆண்டில் குடியுரிமைப் பிரச்சினை முற்றாக ஒழிக்கப்படுவதற்கு வழிவகுத்தது. லயன் குடியிருப்பு முறைகளும் படிப்படியாக ஒழித்து தனிவீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மலையகத்துக்கான பிரதேச செயலகங்களும் பிரதேச சபைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.



சந்திரசேகரனுக்கு பின்னால் மலையக மக்கள் முன்னணியின் தலைமைப் பொறுப்பையேற்ற இராதாகிருஷ்ணன் அமரரின் அரசியல் சிந்தனைகளையும் எண்ணக்கருக்களையும் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் முன்னெடுத்துச் செயற்பட்டு வருகிறார். அமரரின் பல்வேறு பிரகடனங்களை தமிழ் முற்போக்கு கூட்டணியுடன் இணைந்து அடிப்படைக் கோரிக்கைகளாக முன்வைத்து இராதாகிருஷ்ணன் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகிறார்.

மலையகம் பல்வேறு கருத்தியல்களின், பல தரப்பினரின் அபிலாசைகளின் மோதல் களமாகவே திகழ்ந்திருக்கிறது. சமகால அரசியலில் இந்தப் பன்முகப் போக்கை மலையக சமூக, அரசியல், கலாசார வெளியில் உருவாகிவரும் மாறுபட்ட சிந்தனைப் போக்குகளை, மாறிச்செல்லும் தடங்களை நுட்பமாக அறிந்துவைத்திருந்த ஒரு அரசியல் போராளியின் மறைவு மலையகத்தின் எழுச்சிமிக்க வரலாற்றுச் செல்நெறியின் மீது கவிந்து போய்விட்ட கருநிழலாகவே தோற்றம் தருகிறது என்று மலையக கல்விமான் மு.நித்தியானந்தன் அன்று கூறினார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவராக சந்திரசேகரன் செயற்பட்ட இரு தசாப்த காலத்தில் அவரது இலட்சியப் பாதையில் பற்றுறுதியுடன் இணைந்து பயணம் செய்தவர்கள் மிகப்பலர். நடைமுறைக்கு ஒவ்வாத விமர்சனங்களை வீசியவர்கள் சமுதாயத்தில் இருந்து ஒதுங்கிப் போனார்கள். அந்தக் காலப்பகுதியில் அவர் முகங்கொடுத்த சவால்கள் பல. எதிர்கொண்ட சோதனைகள், இழப்புக்கள் அநேகம். அவற்றையெல்லாம் ஒரு தலைவனுக்கு இயல்பாக இருக்கவேண்டிய துணிவாற்றலுடனும் தொலைநோக்குடனும் அவர் வெற்றிகரமாகக் கையாண்டார். அந்த உயர்ந்த மாமனிதனின் மறைவு மலையக தமிழ்ச் சமுதாயத்துக்கு மாத்திரமல்ல முழு இலங்கைக்குமே பேரிழப்பு.

எச்.எச். விக்கிரமசிங்க

# புதிய பட்டுப் பாதைக்கு பத்து வருடங்கள்: முடிவுகள் மற்றும் எதிர்பார்ப்பு வெளியீடு

சீனாவின் புதிய பட்டுப்பாதைத் திட்டத்திற்கு பத்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. அதற்கு இணைந்ததாக, இத்திட்டத்தின் மூலம் இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் எதிர்கால எதிர்பார்ப்புகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், ஆசிய முன்னேற்ற மன்றத்தினால் தொகுக்கப்பட்ட 'புதிய பட்டுப்பாதையின் பத்தாண்டு முடிவுகளும் எதிர்பார்ப்புகளும்' என்ற அறிக்கை அண்மையில் பத்தரமுல்லை வாட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் வெளியிடப்பட்டது.

ஆசிய முன்னேற்ற மன்றத்தின் உறுப்பினர்கள் இந்த அறிக்கையை வெளியிடுவது குறித்து பார்வையாளர்களுக்கு தெரியப்படுத்தியதுடன், மேலும் கருத்துகளை தெரிவித்த இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்னாள் தலைவர் பொறியியலாளர் வினோத் முனசிங்க, "சீனாவால் ஆரம்பிக்கப்பட்ட 'பெல்ட் ரோட்' அதாவது புதிய பட்டுப் பாதை திட்டத்திற்கு பத்து ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளது. உலக வரலாற்றில் உலகம் முழுவதையும் உள்ளடக்கி ஒரே நாட்டினால் செயல்படுத்தப்பட்ட மிகப்பெரிய உள்கட்டமைப்பு மற்றும் பிற சமூகபொருளாதார வசதிகள் மேம்பாட்டுத் திட்டம்" என்று குறிப்பிட்டார். தற்போது உலகின் அனைத்துக் கண்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 155 நாடுகள் இந்தத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த நாடுகளில் உள்ள சுமார் ஐந்து பில்லியன் மக்கள் இந்தத் திட்டத்தில் பயன்பெற வாய்ப்பு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"சில நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் நாம் 'மாவத்தக் தீரயென்' அதாவது புதிய பட்டுப்பாதையின் ஆரம்பத்தால் குறைவான நன்மைகளையே அடைந்துள்ளோம்" என மேற்குலக அரசியல் விஞ்ஞான நிறுவனத்தின் அதிபர் கலாநிதி வருண சந்திரகீர்த்தி தெரிவித்தார்.



"இது மொத்த தேசிய உற்பத்தியில் 14வீதம் ஆகும். இந்த முயற்சியின் கீழ் கம்போடியாவில் செய்யப்பட்ட முதலீடுகள் முறையே அந்த நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியின் 140 மற்றும் 60 வீதம் ஆகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக சீனாவுடனான பொருளாதார மற்றும் வரலாற்று உறவுகளால் எமது நாடு பெற்றுக்கொண்ட நன்மைகளின் அளவு மிகவும் குறைவு" என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமட்டுமின்றி, எமக்குக் கிடைத்தவை மிகவும் மெதுவான முறையில் முன்னெடுத்துச் செல்லப்பட்டு, மாற்றங்களுக்கு உள்ளாகி வருவதை, கொழும்பு துறைமுக நகரத்தின் பணிகளுக்கு உதாரணமாகச் சுட்டிக்காட்டினார். நாட்டின் அரசியல் ஸ்திரமின்மைக்கு எதிரான நிலை மற்றும் மேற்குலகின் நலனுக்காக நாட்டில் உருவாக்கப்பட்ட சீனத் தடையினால் இலங்கையில் குறைவான முதலீடுகளே பெறப்பட்டுள்ளன என சுட்டிக்காட்டிய வருண சந்திரகீர்த்தி "சீனக் கொலனி, சீனக் கடன்பொறி போன்ற போலிக் கருத்துகள் எமது நாட்டில் மிகவும் அதிகமாக இருப்பதைக் காணமுடியும்" என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய பட்டுப்பாதையின் மூலம் சர்வாதிகார அரசு வலுப்பெறும் என்ற புதிய கட்டுக்கதை நமது நாட்டில் பரப்பப்பட்டு வருவதாகவும், ஆனால் அவ்வாறானதொரு நிலை உருவாகாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல வருடங்களாக மேற்கத்திய ஏகாதிபத்தியத்தால் பாதிக்கப்பட்ட எமது நாடு இனியும் இவ்வாறான அழிவுகளுக்கு பலியாகாது எமது சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட பாதையின் ஊடாக அதிகூடிய பலன்களை நாம் பெற வேண்டும் எனவும் வருண சந்திர கீர்த்தி மேலும் தெரிவித்தார்.

இதன்போது, ஆசிய முன்னேற்ற மன்றத்தின் உறுப்பினர்கள், இலங்கை ஜெர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்னாள் தலைவர் பொறியியலாளர் வினோத் முனசிங்க, மேலைத்தேய அரசியல் விஞ்ஞான நிறுவனத்தின் தலைவர் கலாநிதி வருண சந்திரகீர்த்தி, ஜகத் முனசிங்க, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பெர்சி சமரசிங்க, மீன்பிடித் துறைமுக வரையறுக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பொதுமுகாமையாளர், கணனி பொறியியலாளர் மற்றும் ஊடகவியலாளர் சமன் விதுநேத் ஜெயக்கொடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

2024ஆம் வருடத்திற்கான

# கிராம அதிகாரிகளின் வருடாந்த இடமாற்றம் ஒத்திவைப்பு

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

கிராம அதிகாரிகளின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றம் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் மார்ச் மாதம் முதலாம் திகதி வரை தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சனத்தொகைமற்றும்குடியிருப்பு கணக்கெடுப்பு மற்றும் தேர்தல் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளில் கிராம அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதால் குறிப்பிட்ட திணைக்கள தலைவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் இடமாற்ற ஒத்திவைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி இடமாற்ற ஒத்திவைப்பு தொடர்பில் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் மாவட்ட செயலாளர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

சனத்தொகை புள்ளி விபரங்கள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேர்தல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்துக்கும் இதுதொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொவிட் தொற்றால் பெண் பலி

(அநுராதபுரம் மேற்கு தினகரன் ஒருவர்)

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக (29) உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

எட்டவீரகொள்ளாவ பொலிஸ் பகுதிக்குட்பட்ட, எட்ட வீரகொள்ளாவ மதவாச்சி பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சுவாச கோளாறு காரணமாக முதலில் மதவாச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதரம் போதனா வைத்தியசாலை MICU பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் குறித்த பெண் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் .

# மூளைக் காய்ச்சலால் மற்றொரு கைதி உயிரிழப்பு

(வெலிகம தினகரன் நிருபர்)

மாத்தறை சிறைச்சாலையின் மற்றுமொரு கைதி மூளைக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளார். அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த கைதியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

வலஸ்முல்லை பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயது நபரே இவ்வாறு உயரிழந்துள்ளார். கடந்த வாரமும் இவ்வாறு கைதி ஒருவர் மூளைக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

## Invitation for Bids (IFB)

**Democratic Socialist Republic of Sri Lanka**
**Valikamam East Pradeshiya Sabha, Puttur.**
**Northern Province**
**Bidding Documents for Procurement of Colored waste Bins**

1. The Democratic Socialist Republic of Sri Lanka *has received* a *loan* from the *world Bank* towards the cost of *Local development Support Project*, and intends to apply part of the proceeds of this *credit* to payments under the Contract for the Good (s) stated in the Table below.
2. **The Chairman, Local Authority Procurement Committee** on behalf of the **Valikamam East Pradeshiya Sabha, Puttur,** Northern Province, invites sealed bids from eligible and qualified bidders for the Procurement of Colored waste Bins as in table below **and all bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**

| No | Bid No | Name of Item | Employer's Estimated Cost (Rs.Mn) | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/VEPS/PT-2 (Coloured waste Bins) /2023/01 | Procurement of Coloured Waste Bins. | 3.70 | 30days | 01.04.2024 | 37,000.00 | 29.04.2024 |

3. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
4. Interested eligible bidders may obtain further information on public working days between **09:00** hrs and **15:00** hrs from **01st January 2024 to 28th January 2024** from **Secretary, Valikamam East Pradeshiya Sabha, Puttur** and inspect the bidding documents at the same place on the above time.
   TP: **-021 205 8867,021 205 8983,** Email secveps@yahoo.com
5. Qualification requirements are include possessing the minimum 3 years' experience in selling and having Island wide maintenance in the particular brand and field. Additional details are provided in the bidding document.
6. A complete set of Bidding Document is English language may be purchased by interested bidders on submission of a written application to the address **Secretary Valikamam East Pradeshiya Sabha-Puttur** from **01st January 2024 until 28th January 2024 from 09.00 hrs to 15.30 hrs** on public working days from 09:00 hrs to 15:00 hrs and upon payment of non-refundable fee of Rs 2,000.00 (Including all Taxes). The method of payment should be by cash.
7. Complete Bids must be delivered to the address below in two copies as original and the duplicate. The original and duplicate should be enclosed separately and mark "Original" and "Duplicate" respectively in sealed envelopes. Both envelopes should be marked the "**Bid number**" on top left-hand corner of the envelop. Complete Bids should be delivered to **Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur** on or before **29th January 2024 at 14.00 hrs.** Electronic bidding will not be permitted. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend in person.
8. The Pre-Bid Meeting will be held at **Valikamam East Pradeshiya Sabha-Puttur** on **08th January 2024** at 14.00 hrs, Interested Bidders May Participate in This Meeting Their own expenses.
9. The Bid shall be valid up to 63 days after the deadline for Bid Submission. All bids shall be accompanied by Bid Security as stated in the Table above

Chairman,
Local Authority Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha,
Puttur.

01.01.2024

## சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

325

தொழில்துறை
பொது

குருநாகல் தும்பு ஆலையில், வேலை செய்வதற்கு சோடி அல்லது ஆண் அல்லது பெண்கள் தேவை. உணவு இலவசம் தங்குமிட வசதிகளும் இலவசம் T.P. 077 - 4280790/ 076 - 7090834 085286

போக்குவரத்துச் மறறும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்**

## கேள்விமனு கோரும் அறிவித்தல்

**2024ஆம் ஆண்டில் நுகேகொடை தலைமை அலுவலகத்திலும் நாடெங்குமுள்ள 25 கிளைகளிலும் சுத்திகரிப்பு சேவை மற்றும் பாதுகாப்பு சேவை செய்வதற்கு தகுதியும் அனுபவமும் கொண்ட நிறுவனங்களிடம் இருந்து விலைகூறல் மனுக்கள் கோரப்படுகின்றன.**

விலைகூறல் மனு நிபந்தனைகள்

(1) மனுப் பத்திரங்களை இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை என்னும் முகவரியிலுள்ள தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தின் கணக்குப் பிரிவைச் சேர்ந்த கணக்காளரிடமிருந்து 2024 ஜனவரி 02 தொடக்கம் 2024 ஜனவரி 22 வரை வார நாட்களில் மு.ப.9.00க்கும் பி.ப. 2.00க்கும் இடையே பெற்றுக்கொள்ளலாம்.

(2) மனுப் பத்திரங்களைப் பெறும்போது மீளப் பெறமுடியாத வைப்பாக ரூ.2,000/.- செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் விலைகூறல் மனுவைச் சமர்ப்பிக்கும்போது மீளப் பெறக்கூடிய வைப்பாக ரூ.100,000/.- (22 ஜனவரி 2024 முதல் 4 மாதங்கள் செல்லுபடியாகக்கூடிய) வணிக வங்கியொன்றின் ஊடாக நிபந்தனையற்ற முறையில் தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தின் பெயருக்குச் செலுத்தப்படுவதோடு, பிணையொன்றும் சமர்ப்பிக்கப்படுவது கட்டாயமாகும். அவ்வாறில்லாத மனுக்கள் நிராகரிக்கப்படும்.

(3) சீல் வைக்கப்பட்ட விலைகூறல் மனுக்கள் அலுவலகங்களின் சுத்திகரிப்பு சேவை - 2024 அல்லது அலுவலகங்களின் பாதுகாப்பு சேவை - 2024 என்று இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்ட கடித உறையில் இடப்பட்டு, கீழ்க்காணும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை என்னும் முகவரியிலுள்ள போக்குவரத்து வைத்திய நிலையத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டிக்குள்ளும் மனுக்களைப் போடலாம்.

(4) விலைகூறல் மனுக்களை ஏற்றுக்கொள்ளுதல் 2024 ஜனவரி 24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவடையும் என்பதுடன், உடனடியாகவே மனுக்கள் திறக்கப்படும். இந்த வேளையில், மனுதாரர்கள் அல்லது அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

(5) பூர்வாங்க விலைகூறல் மனு கோரல் கூட்டம் 2024.01.18 அன்று முற்பகல் 11.00க்கு போக்குவரத்து வைத்திய நிலையத்தின் தலைமை அலுவலகத்தில் பணிப்பாளர்கள் கூட்ட அறையில் இடம்பெறும்.

நுகேகொடை, வேரஹர, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, குருநாகல், புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவை, கண்டி, நுவரெலிய, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை மற்றும் பதுளை.

**தலைவர்,**
**திணைக்கள கொள்முதல் குழு,**
**தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்**
**இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை.**
**தொலைபேசி: 0112 814862 / 0112 814 865**

## மாத்தளை மாநகர சபை

### 2024ம் ஆண்டிற்காக வரிக்கட்டண வரி விதித்தல்

1967 இல. 08 சட்டத்தின் மற்றும் 1981 இல. 10 சட்டத்தின் திருத்தப்பட்ட சட்ட யாப்பின் 252 ஆம் அதிகாரமான மாத்தளை மாநகர சபை சட்டவாக்கத்தின் 230 ஆம் பிரிவின் மற்றும் அங்கு அடங்கியுள்ள ஏனைய விதிமுறைகளின் கீழ் மாத்தளை மாநகர சபை அதிகார பிரதேசத்திற்குள் அமைந்துள்ள அசையா சொத்துக்களின் வருடாந்த பெறுமதி 2023 ஆண்டில் விதிக்கப்பட்ட வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் 2024ம் ஆண்டிற்கான வரிக்கட்டண வரிகள் கீழ்க்காணும் விகிதாசாரத்தின் அடிப்படையில் விதித்து அறவிட்டுக் கொள்வதற்கும் அக்கட்டணங்களை காலாண்டுகளாக முறையே 2024 மார்ச் 31, ஜீன் 30, செப்டெம்பர் 30 மற்றும் டிசம்பர் 31 அல்லது அதற்கு முன் செலுத்த வேண்டியதுடன் 2023 நவம்பர் 16ம் திகதி நடத்தப்படும், முகாமைத்துவ கமிட்டிக் கூட்டத்தின் இல. 23/813 என்ற தீர்மானத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

**குடியிருப்பு இடங்கள் மற்றும் வெற்று இடங்களுக்காக - 12%**
**வர்த்தக சொத்துக்களுக்காக - 20%**

மேலும் 1979 இல. 42, மாநகர சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் மாநகர சபை சட்டவாக்கத்தின் 230 மற்றும் 255 பிரிவுகளுக்கு மேற்கொள்ளப்படும் திருத்தங்களின் பிரகாரம் 2024ம் ஆண்டிற்காக செலுத்தவேண்டிய முழு வரிக்கட்டண வரி 2024 ஜனவரி 31ம் திகதி அல்லது அதற்கு முன்பு செலுத்துவதாயின் அவ் வருடத்திற்காக வருடாந்த வரிக்கட்டண வரி 2024 ஜனவரி 31ம் திகதி அல்லது அதற்கு முன்பு செலுத்துவதாயின் அவ்வருடத்திற்காக வருடாந்த வரிக்கட்டண வரியில் பத்து வீதம் (10%) கழியும், சகல காலாண்டு சார்பாகவும் செலுத்த வேண்டிய வரிக்கட்டண வரி குறித்த காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்துவதாயின் அக்காலாண்டு வரிக்கட்டண வரியில் ஐந்து வீதம் (5%) கழிவு குறைக்கப்படுவதுடன், குறித்த தினத்திற்கு பின்னர் செலுத்தப்படும் வரிக்கட்டண வரிக்காக கீழ்க்காணும் விதத்தின் தண்டக் கட்டணம் அறவிடப்படும் எனவும் மேலும் அறிவிக்கிறேன்.

**குடியிருப்பு இடங்கள் மற்றும் வெற்றுக்காணிகளுக்கு - 15%**
**வர்த்தக சொத்துக்களுக்கு - 20%**

**யுரேஷ் நிஷாந்த மாதுவகே**
**மாநகர சபை ஆணையாளர்**
**மாநகர சபை - மாத்தளை.**

**2023.12.22ம் திகதி**
**மாத்தளை மாநகர சபை அலுவலகத்தில்**

## கட்டான பிரதேச சபை

### வரிக்கட்டணம் விதித்தல் - 2024ம் ஆண்டு

1987 இல 15 பிரதேச சபை சட்டத்தின் 9.3 பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 13ம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் விதிமுறைகளுக்கு அமைவாக 2024ம் ஆண்டிற்காக கீழ்க்காணுமாறு வரிக்கட்டணங்களை விதித்து அறவிடுவதற்கு 2023.11.02ம் திகதிய தீர்மான இலக்கம் 1493இன் கீழ், தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

(அ) ரத்தொழுகம உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் ரத்தொழுகம வீடமைப்புத் திட்டத்திற்குள் அமைந்துள்ள அசையா சொத்துக்களின் வருடாந்த மதிப்பீட்டு பெறுமதியில் 10% வரி விகிதாசாரம், அதற்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள அசையா சொத்துக்களின் வருடாந்த மதிப்பீட்டு பெறுமதியில் 6% வரி விகிதாசாரம்.

(ஆ) கட்டான, தெமங்ஹந்திய மற்றும் ஆடி அம்பலம் உப அலுவலக அதிகாரப் பிரதேசங்களில் அமைந்துள்ள அசையா சொத்துக்களின் வருடாந்த மதிப்பீட்டுப் பெறுமதியில் 6% வரி விகிதாசாரம்.

2. 2024ம் ஆண்டிற்கு செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள வரிக்கட்டண வரி 2024 ஜனவரி 31 அல்லது அதற்கு முன் செலுத்தப்படின் 10% (பத்து வீத, கழிவும், அவ் வரித்தொகை காலாண்டுகளாக செலுத்தப்படின் குறித்த காலாண்டின் முதலாம் மாதத்திற்குள் செலுத்தப்படின் 05% (ஐந்து வீத) கழிவும் வழங்கப்படுவதாக பிரதேச சபைச் சட்டத்தின் 134(7) பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகிறது.
3. 2024ம் ஆண்டின் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் காலாண்டுகளின் வரிக்கட்டண வரி முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்டெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய தினங்களில் அல்லது அதற்கு முன்பு (குறித்தவாறு) கட்டான, தெமங்ஹந்திய, ஆடி அம்பலம் மற்றும் ரத்தொழுவ ஆகிய உப அலுவலகங்களில் (குறித்தவாறு) செலுத்தி முடிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு செலுத்தப்படாத சகல வரிக்கட்டண வரி சார்பாகவும் பிரதேச சபை சட்டத்தின் இல. 161 'அ' II மற்றும் III பிரிவுகளில் குறிப்பிடப்படுமாறு வெற்றுக் காணி மற்றும் குடியிறுப்பு சார்பாக 15% மற்றும் ஏனைய அசையா சொத்துக்கள் சார்பாக 20% அதிக கட்டணத்தை செலுத்த வேண்டியுள்ளதாகவும், இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.
4. 2024ம் ஆண்டிற்கு குறித்த வரிக்கட்டண வரி ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அலுவலக நேரங்களில் உப அலுவலகத்தில் வரி ஆவணங்களை பொது மக்களுக்கு பரீட்சிக்க முடியும் எனவும், பிரதேச சபைச் சட்டத்தின் 141 (1) மற்றும் (2)ம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது.
5. உங்களுக்கு வரிக்கட்டணங்களை செலுத்தும் வசதிக்காக 2024 ஜனவரி மாதத்தின் சகல சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நடமாடும் சேவை நிகழ்வுகளை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவ் இடங்களுக்கு வருகை தந்து அல்லது வார நாட்களில் அலுவலகத்திற்கு வருகை தற்து ஜனவரி 31 இற்கு முன்பு வரிக்கட்டண வரித் தொகையைச் செலுத்தி 10% கழிவைப் பெற்றுக் கொள்ளுமாறும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.
6. 2024ம் ஆண்டிற்கு குறித்த மதிப்பீட்டு அறிவித்தல் இதுவரை உங்களுக்கு கிடைக்கவில்லையாயின் இதற்கு முன்பு உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மதிப்பீட்டு அறிவித்தல் அல்லது உங்களால் வரிக்கட்டண வரித்தொகை செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டுடன் வருகை தந்து உங்களுக்கு வரித்தொகையை செலுத்த முடியும் என மேலும் தயவுடன் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**கட்டான பிரதேச சபை,**
**தெமங்ஹந்திய,**
**2024.01.01**

**எம்.ஏ.எஸ். சமந்த,**
**செயலாளர் மற்றும் கட்டான**
**பிரதேச சபையின் அதிகாரி**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி.**

**மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு, வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு**
**மேல் மாகாணம்**

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மேல் மாகாணம்)

### ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2024ஆம் வருடம்

எமது அதிகார சபையினால் மேல் மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வீதி அபிவிருத்தி வேலைகள், பாலங்களின் நிர்மாணம் மற்றும் வீதி பராமரிப்பு மற்றும் கட்டிட நிர்மாணத் துறைக்கு இயைபாக 2024ஆம் வருடத்திற்கான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்காக 2024-01-05ஆம் திகதி முதல் 2024-02-09ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. ஒப்பந்தக்காரர்களாகப் பதிவைப் பெறுவதற்கு உத்தேசிக்கும் விண்ணப்பதாரர்கள் பெருந்தெருக்கள் மற்றும் பாலங்கள் / கட்டிடங்கள் துறையில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இக்டாட் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

02. ஒப்பந்தக்காரராக பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பக் கட்டணம் 2000.00 ரூபாவாகும் என்பதுடன் பதிவுக் கட்டணமாக 10,000.00 ரூபா செலுத்துதல் வேண்டும். இதற்குப் புறம்பாக 18% வெட் வரி அறவிடப்படும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை தலைமை அலுவலகத்தின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
(அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை மட்டும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.)

03. பதிவு பெறுவதற்கு உத்தேசிக்கும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை முறையாகப் பூர்த்தி செய்து அதற்குரித்தான அனைத்து ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்து 2024-02-29ம் திகதி அல்லது அதற்கு முன் பெறுகைப் பிரிவிற்கு ஒப்படைத்து பதிவு செய்து கொள்ளலாம்.

**பொது முகாமையாளர்,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மேல் - மாகாணம்)**
**இல. 59, புனித செபஸ்தியன் மேடு,கொழும்பு-12.**

**தொலைபேசி இல. 011-4849835**

**2023-12-28ம் திகதி.**

## அறிவித்தல்

2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் பிரகாரம், 2023 டிசம்பர் 27 ஆம் திகதி நிறுவனத்தின் பங்குதாரர்களால் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானம் ஒன்றின் மூலம் பொது நிறுவனம் ஒன்றாக நிறுவனத்தின் அந்தஸ்துகள் மாற்றப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டதோடு அதன்படி அதன் பெயர் மாற்றப்பட்டதாக கருதப்படுகிறது, கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்படும் கூட்டிணைவின் புதிய சான்றிதழின்படி நிறுவனத்தின் பெயரை மாற்றும் திகதியில் இருந்து (பங்குதாரர்களின் தீர்மானத்தின்படி) அது அமுல்படுத்தப்படுகிறது என்பதை நாம் முல்லர் அண்ட் பிப்ஸ் (ஹெல்த் கெயார்) (பிறைவெட்) லிமிடெட் என்ற நிறுவனம் இத்தால் அறியத்தருகிறது.

நிறுவனத்தின் முந்தைய பெயர்: முல்லர் அண்ட் பிப்ஸ் (ஹெல்த் கெயார்) (பிறைவெட்) லிமிடெட்

நிறுவனத்தின் முந்தைய இலக்கம்: PV 7708

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: 98, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,கொழும்பு 10

நிறுவனத்தின் முன்மொழியப்பட்ட புதிய பெயர்: முல்லர் அண்ட் பிப்ஸ் (ஹெல்த் கெயார்) லிமிடெட்

**கோர்பரேட் மனேஜர்ஸ் அண்ட் செக்ரடேரிஸ் (பிறைவெட்) லிமிடெட்**
**செயலாளர்கள்**
**2023.12.29**

## காலத்தை நீடித்தல்

### 2024ம் ஆண்டிற்காக தனியார் துப்புரவேற்பாட்டு சேவை மற்றும் பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ளல்

### மாவட்ட செயலகம் - மொனராகல

2023 டிசம்பர் 28 தினமின பத்திரிகையின் பக்க இல.15, தினகரன் பத்திரிகையின் பக்க இல.15 மற்றும் டெயிலி நியூஸ் பத்திரிகையின் பக்க இல. 07 இல் பிரசுரமான அறிவித்தல்களில் கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கும் காலம் 2024.01.16 வரையும், கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் காலம் 2024.01.17 பி.ப. 2.00 வரையும் நீடிக்கப்படுவதாக அறிவித்துக் கொள்கிறேன்.

**ஆர்.எம்.பசன் எஸ்.பீ.ரத்னாயக்க,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு/ மாவட்ட செயலாளர்/**
**அரசாங்க அதிபர்,**
**மொனராகல நிர்வாக மாவட்டம்.**

# அறிவித்தல்

## தேர்தல் குழுக்களை அறிமுகம் செய்தல் மற்றும் விஷேட பொது கூட்டங்களை அறிமுகம் செய்தல்

**(இலங்கை வில்வித்தை சங்கம், இலங்கை கபடி சம்மேளனம், இலங்கை மல்யுத்த சம்மேளனம், இலங்கை பீரிட்ஜ் (Bridge) சம்மேளனம் மற்றும் இலங்கை தேசிய உருளை – சறுக்குதல் சங்கம்)**

கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 09 ஆம் இலக்கத்திலுள்ள விளையாட்டுத்துறை அமைச்சு, 4 ஆம் மாடியின் டங்கன் வயிட் கேட்போர்கூடத்தில் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் விளையாட்டுத்துறை பணிப்பாளர் நாயகத்திற்கு 2023.12.22 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட 2363/74 என்ற இலக்கமுடைய வர்த்தமானி அறிவித்தலினால் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட தேசிய விளையாட்டுக்கள் சங்கங்கள் /சம்மேளனங்கள் தொடர்பாக தேர்தல் குழுக்கள் மற்றும் தகவல் சேகரித்தலை அறிமுகப்படுத்துவதற்காக பின்வரும் திகதிகளில் விஷேட பொது கூட்டங்கள் நடைபெறும்.

| தேசிய விளையாட்டு சங்கங்கள் / சம்மேளனங்கள் | திகதி | நேரம் |
|---|---|---|
| 01. இலங்கை வில்வித்தை சங்கம் | 2024.01.16 | மு.ப. 10 மணிக்கு |
| 02. இலங்கை கபடி சம்மேளனம் | 2024.01.17 | மு.ப. 10 மணிக்கு |
| 03. இலங்கை மல்யுத்த சம்மேளனம் | 2024.01.18 | மு.ப. 10 மணிக்கு |
| 04. இலங்கை பிரிட்ஜ் சம்மேளனம் | 2024.01.19 | மு.ப. 10 மணிக்கு |
| 05. இலங்கை தேசிய உருளை - சறுக்குதல் சங்கம் | 2024.01.22 | மு.ப. 10 மணிக்கு |

உரித்தான தேசிய விளையாட்டு சங்கங்கள் /சம்மேளனங்களின் யாப்புக்களின் பிரகாரம், இணைக்கப்பட்ட விளையாட்டு கழகங்கள் /அமைப்புக்கள்/சங்கங்கள் இருப்பின், சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் இந்த விஷேட பொது கூட்டத்திற்கு அவரது விளையாட்டு கழகத்தின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களுடன் மேலே குறிப்பிட்டுள்ள திகதிகள் மற்றும் நேரத்தில் சமுகமளிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றார்.

**பேராசிரியர் (ரியர் அட்மிரல்) ஷேமல் பெர்ணாண்டோ,**
**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்.**

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்.460) 39 அ (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்துக் கொள்ளல் சட்டத்தின் 38 (ஆ) துணை விதியின் கீழ் விளம்பரப்படுத்தப்பட்டதும் இலக்கம் 1787/17 மற்றும் 2012 டிசம்பர் 04 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் விளம்பரப்படுத்தப்பட்டதும், 2012 இலக்கம் 294 ஆம் கட்டளையில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த காணி முற்று முழுதாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசுடையதாக்கப்பட்டிருந்ததோடு, குறித்த கட்டளைச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) அத்தியாயத்தின் கீழ் காணித்துண்டுகளின் உரிமை எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் அச்சரத்தின் (1979 இலக்கம் 8 ஆம் சரத்தில் உட்பட்ட) 39 (அ) 1 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்தவங்களின் கீழ் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூடி ஹரீன் பிரநான்து ஆகிய நான் குறித்த காணித் துண்டுகளில் கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டை மாத்திரம் இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் இரத்துச் செய்கின்றேன்.

**ஹரீன் பிரநான்து**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்,**

எனது குறிப்பு இலக்கம்:- 4-3/15/2012/VE/175
பிரதேச செயலகத்தின் குறிப்பு இலக்கம் : PAS/LND/ACQVI/07/F1/249C/58

2023 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி,
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,**
**1200/6 "மிஹிகத மெதுர" ரஜமல்வத்த வீதி,**
**பத்தரமுல்ல,**

**அட்டவணை 1**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவின் மொரவக்கோறளை கிழக்கு சிறு பிரிவு, ஊருபொக்க (ஆ.கி.பட.23) கிராமத்தில் அமைந்துள்ளதும் 2018.02.20 ஆம் திகதி நிலஅளவை அதிபர் அவர்களினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் MR/PSG/2017/321 படத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகளுக்கான பெயர்கள் எல்லைகள் மற்றும் விஸ்தீரணங்கள் பின்வருமாறாகும். (மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2331/14 மற்றும் 2023.05.09ஆம் திகதிய வர்த்தமானியைப் பாரக்கவும்)

01. துண்டுக் குறியீடு B - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0082 ஹெக்டயார்
02. துண்டுக் குறியீடு E - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0051 ஹெக்டயார்
03. துண்டுக் குறியீடு F - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய -விஸ்தீரணம் 0.0041 ஹெக்டயார்
04. துண்டுக் குறியீடு H ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய விஸ்தீரணம் 0.0112 ஹெக்டயார்
05. துண்டுக் குறியீடு J - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0082 ஹெக்டயார்.
06. துண்டுக் குறியீடு L - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0441 ஹெக்டயார்
07. துண்டுக் குறியீடு M - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0089 ஹெக்டயார்
08. துண்டுக் குறியீடு N - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0078 ஹெக்டயார்
09. துண்டுக் குறியீடு Q - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0016 ஹெக்டயார்
10. துண்டுக் குறியீடு R - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0044 ஹெக்டயார்
11. துண்டுக் குறியீடு V - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0022 ஹெக்டயார்
12. துண்டுக் குறியீடு W - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய விஸ்தீரணம் 0.0011 ஹெக்டயார்
13. துண்டுக் குறியீடு Z -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0028 ஹெக்டயார்
14. துண்டுக் குறியீடு AA - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0070 ஹெக்டயார்
15. துண்டுக் குறியீடு AC - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0054 ஹெக்டயார்
16. துண்டுக் குறியீடு AD -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0032 ஹெக்டயார்
17. துண்டுக் குறியீடு AG - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0026 ஹெக்டயார்
18. துண்டுக் குறியீடு AH - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0026 ஹெக்டயூர்
19. துண்டுக் குறியீடு AL - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0020 ஹெக்டயார்
20. துண்டுக் குறியீடு AM -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0031 ஹெக்டயார்
21. துண்டுக் குறியீடு AQ -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய-விஸ்தீரணம் 0.0026 ஹெக்டயார்
22. துண்டுக் குறியீடு AR -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய-விஸ்தீரணம் 0.0034 ஹெக்டயார்
23. துண்டுக் குறியீடு AU - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய-விஸ்தீரணம் 0.0051 ஹெக்டயார்
24. துண்டுக் குறியீடு AW - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய விஸ்தீரணம் 0.0004 ஹெக்டயார்
25. துண்டுக் குறியீடு BB -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0002 ஹெக்டயார்
26. துண்டுக் குறியீடு BC - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய விஸ்தீரணம் 0.0008 ஹெக்டயார்
27. துண்டுக் குறியீடு BH -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0047 ஹெக்டயார்
28. துண்டுக் குறியீடு BL - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய விஸ்தீரணம் 0.0047 ஹெக்டயார்
29. துண்டுக் குறியீடு BT - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய விஸ்தீரணம் 0.0008 ஹெக்டயார்
30. துண்டுக் குறியீடு BU - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய -விஸ்தீரணம் 0.0009 ஹெக்டயார்

# மலர்ந்துள்ள புத்தாண்டை புதிய நினைவுகளுடன் வரவேற்போம்

### கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்

மலர்ந்துள்ள 2024 ஆம் ஆண்டை அனைவரும் புதிய எதிர்பார்ப்புகளுடனும் அவற்றை அடைந்துகொள்வதற்கான உறுதியுடனும் ஆரம்பிக்க வேண்டும் என கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்து தெரிவித்த அவர்,

2024 ஆம் ஆண்டை ஒரு நேர்மறையான மனப்பாங்குடனும், திடவுறுதி மற்றும் அர்ப்பணிப்புடனும் நாம் வரவேற்க வேண்டும்.



எதிர்காலத்திற்கு அடித்தளம் அமைக்கும் கடந்த காலத்தை மீண்டும் மீட்டிப் பார்ப்பதன் மூலமே மனிதன் தனது பாதையில் இன்னல்கள் அற்ற வளமான பலன்களைப் பெறக்கூடியதாக அமைத்துக்கொள்கிறான். அவ்வாறே கடந்த வருடத்தின் தனது அனுபவங்களிலிருந்து கற்கவேண்டிய பாடங்களை கற்று அவற்றை சீர்தூக்கிபார்ப்பதன் மூலமே புதிய எதிர்பார்ப்புக்களை யதார்த்தமாக்கி கொள்ள முடியும். இவ்வாண்டு ஒழுக்கம், நல்லிணக்கம் மற்றும் சுபீட்சம் ஆகியவற்றை அடையக்கூடிய பரந்த பாதையில் முன்பை விட கூடுதல் கரிசனையுடனும் கவனத்துடனும் அடையாளம் காணவேண்டிய உறுதிப்பாட்டை கொண்டதாகவே இந்த புத்தாண்டு அமைகின்றது.

## விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

### விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்

### "கிரீடா சக்தி" நிகழ்ச்சித் திட்டம் – 2024

நாடளாவிய ரீதியில் பரந்துள்ள திறமையுள்ள விளையாட்டு வீர, வீராங்கனைகளின் திறமையை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 750 விளையாட்டு வீரர்களை தேர்ந்தெடுத்தல்

**விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான தகைமைகள்**

2023ம் ஆண்டில் கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட மட்டத்திலான தேசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றுள்ள வீர வீராங்கனைகள்

இளைஞர் அணி - 14 வயது முதல் 16 வயது வரை
கனிஷ்ட அணி - 17 வயது முதல் 19 வயது வரை
சிரேஷ்ட அணி - 20 வயது முதல் 23 வயது வரை

**தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டுக்கள்**

மெய்வல்லுநர் போட்டிகள், டேபிள் டெனிஸ், பெட்மின்டன், பாரம் தூக்குதல், நீச்சல், ஈட்டி எறிதல், பொக்சின், ஜூடோ, கபடி, கராட்டி, நெட்போல், வள்ளம் செலுத்துதல், குறிபார்த்து சுடுதல், ஸ்கொஷ், டைகொன்டோ, வொலிபோல், மல்யுத்தம், சைக்கிலோட்டம், ஹொக்கி, வுஷு, பாஸ்கட்போல், ஜிம்னாஸ்டிக், கெனோயின் மற்றும் காயகிங்

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து தகைமைகளை உறுதி செய்துள்ள வீர வீராங்கனைகள் உடற் தகுதி பற்றிய பரிசீலனை மற்றும் குறித்த விளையாட்டில் உடற்தகைமை பரிசீலனையில் சித்தி அடைந்துள்ள வீர வீராங்கனைகள் மட்டும் "கிரீடா சக்தி" தேசிய அணிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

கிரீடா சக்தி தேசிய அணிக்கு தேர்ந்தெடுக்கப்படும் வீர வீராங்கனைகளுக்கு 2024ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை ஒரு மாதத்திற்கு ரூ. 10,000/- போசனை கொடுப்பனவு பெறுவதற்கு தகைமை பெறுவர்.

சகல சான்றிதழ்களின் பிரதிகள் குறித்த பாடசாலை, சங்கம் அல்லது சம்மேளன பரிந்துரையுடன் கடித உறையின் இடது பக்கம் "கிரீடா சக்தி - 2024" என்று குறிப்பிட்டு 2024.01.20 இற்கு முன்பு விளையாட்டு பணிப்பாளர், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இல. 09, பிலிப் குணவர்தன மாவத்த, கொழும்பு - 07 என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை தொ. பே. இல- 071 - 8130750ஐ அழைத்து உதவிப்பணிப்பாளர் (விளையாட்டு) திரு ஜேன்ஸ் திஸாநாயக்கவிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**பேராசிரியர் (ரியர் அட்மிரல்) ஷேமால் பெர்னான்டோ**
**பணிப்பாளர் நாயகம்**
**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்.**

## மஹரகம நகர சபை
## மஹரகம

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**மஹரகம நகர சபைக்கு கணனிகள், அச்சுப்பொறிகள், புகைப்படப் பீரதி இயந்திரங்கள் மற்றும் பார் கோட் அச்சுப்பொறிகள் மற்றும் ஸ்கேனர்களுக்கான பெறுகை**

பின்வருமாறு பட்டியல்படுத்தப்பட்டுள்ள பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மஹரகம நகர சபையின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| உருப்படி இலக்கம் | பொருட்களின் விபரங்கள் | எண்ணி-க்கை |
|---|---|---|
| 01 | Branded Laptop Computer ( i 7 ) | 03 |
| 02 | Branded all in one Desktop Computer ( i 5 ) | 16 |
| 03 | Branded Uninterruptible Power supply (UPS ) | 34 |
| 04 | BrandedA4 laser Printers | 07 |
| 05 | A3 Size Impact dot Matrix Printer | 01 |
| 06 | Multifunctional Photocopies Machine (Photocopier + Printer) | 02 |
| 07 | Branded handled laser scanner (Bar Code Reader) | 01 |
| 08 | Branded Sticker Printer(Bar Code Printer) | 01 |

❖ ஆர்வமுள்ள மற்றும் தகுதி வாய்ந்த வழங்குநர்கள் தனிப்பட்ட ஒரு உருப்படிக்கு அல்லது ஒரு தொகுதி உருப்படிக்கு அல்லது சகல எண்ணிக்கையான உருப்படிகளுக்கும் விலைகளைக் கோரலாம். தேவைப்பாடுகள் மற்றும் விபரக்குறிப்புகளின் முழுமையான விபரங்கள் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.

❖ இலங்கை அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டியினால் நிர்வகிக்கப்படும் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் பிரகாரம் விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டுள்ள சகல விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.

❖ ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-01-01ஆம் திகதி முதல் 2024-01-22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத மூவாயிரம் ரூபாவை (ரூபா 3,000.00) செலுத்தி மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழையும் சமர்ப்பிப்பதன் பேரில் நகர சபையின் தரை தளத்தில் அமைந்துள்ள கணக்கியல் பிரிவின் வழங்கல் அதிகாரியிடமிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

❖ விலைமனுக்களை 2024-01-22ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் செயலாளர், மஹரகம நகர சபை, மஹரகம எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது மஹரகம நகர சபையின் முதலாம் தளத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''விலைக்கோரும் சாதனங்களின் பெயர்/பெயர்களை'' தயவு செய்து குறிப்பிடவும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவை நிராகரிக்கப்படும்.

❖ 2024-01-22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நேரத்தின் பின் சமுகம்தந்துள்ள விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள விலைமனுதாரர்களின் முன்னிலையில் மஹரகம நகர சபை, முதலாம் தளம், குழு அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

❖ மஹரகம நகர சபை, முதலாம் தளம், குழு அறையில் 2024 ஜனவரி 12ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று இடம்பெறும்.

**தொலைபேசி : 0112-850265 (பொது)**
**0112-850470 (செயலாளர்)**

**செயலாளர் மற்றும் கடமைகள் மற்றும் அதிகாரங்களைச் செயற்படுத்தும் அதிகாரி,**
**மஹரகம நகர சபை,**
**மஹரகம.**
**2024-01-01.**

# 2024 அனைவருக்கும் சுபீட்சமான ஆண்டாகட்டும்

### சுப்பையா ஆனந்தகுமார்

இலங்கை சுதந்திரம் அடைந்து 76 ஆண்டுகள் நிறைவடைகின்ற போதிலும், பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுதலையடைந்த ஏனைய நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றத்தை இலங்கை இன்னும் அடையத் தவறியுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மலர்ந்துள்ள புத்தாண்டில் நாடு அபிவித்தி பாதைக்குச் செல்லும் என ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதியின் கீழ் இயங்கும் மூவர் அடங்கிய தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் குழுவின் உறுப்பினருமான சுப்பையா ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள புத்தாண்டு வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.



புதுவருட சம்பிரதாயங்களின் உண்மையான அர்த்தங்களை புரிந்துகொண்டு வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் அனுபவிப்பதற்கான அபிலாசையுடன் அவற்றை பின்பற்றுவது முக்கியம்.

நாட்டிலுள்ள பெரும்பான்மையான இளைஞர்கள் தற்போதுள்ள அரசியல் முறைமையில் மாற்றம் வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். அக்கோரிக்கையைப் புறக்கணிக்க முடியாது.

எதிர்வரும் தசாப்தத்திற்குள் வளமான இலங்கையை கட்டியெழுப்ப உத்தேசித்துள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்களை விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கான ஆண்டாக இந்த மலர்ந்துள்ள புத்தாண்டு அமையுமென தான் எதிர்பார்ப்பதாகவும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு மிகச் சிறந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

# பிறந்துள்ள புது வருடத்தை உறுதியுடன் வரவேற்போம்

### புதிய ஜ.ம.மு தலைவர்

இன்று பிறந்துள்ள 2024 ஆம் ஆண்டை அனைவரும் புதிய எதிர்பார்ப்புகளுடனும் அவற்றை வெற்றி கொள்வதற்கான உறுதியுடனும் வரவேற்க வேண்டும் என புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் என் ரவிக்குமார் விடுத்துள்ள புது வருட செய்தியில் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், 2024 ஆம் ஆண்டை ஒரு நேர்மறையான மனப்பாங்குடனும், திடவுறுதி மற்றும் அர்ப்பணிப்புடனும் நாம் வரவேற்க வேண்டும்.

எதிர்காலத்திற்கு அடித்தளம் அமைக்கும் கடந்த காலத்தை மீண்டும் மீட்டிப்பார்ப்பதன் மூலமே மனிதன் தனது பாதையில் இன்னல்களற்ற வளமான பலன்களைப் பெறக்கூடியதாக அமைத்துக்கொள்கிறான். அவ்வாறே கடந்த வருடத்தின் தனது அனுபவங்களிலிருந்து கற்கவேண்டிய பாடங்களை கற்று அவற்றை சீர்தூக்கிப்பார்ப்பதன் மூலமே புதிய எதிர்பார்ப்புக்களை யதார்த்தமாக்கி கொள்ள முடியும்.

இ'வ்வாண்டு ஒழுக்கம், நல்லிணக்கம் மற்றும் சுபீட்சம் ஆகியவற்றை அடையக்கூடிய பரந்த பாதையில் முன்பை விட கூடுதல் கரிசனையுடனும் கவனத்துடனும் அடையாளம் காணவேண்டிய உறுதிப்பாட்டை கொண்டதாகவே இந்த புத்தாண்டு அமைகின்றது. அனைவருக்கும் புத்தாண்டு நல்வழ்த்துக்கள் என தெரிவித்துள்ளார்.

# நாட்டில் சுபீட்சமான வாழ்வு உருவாக பிரார்த்திக்கிறேன்



பிறந்துள்ள 2024ஆம் புத்தாண்டில் எமது நாட்டு மக்கள் தற்போது எதிர் கொள்ளும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு சுபீட்சமான வாழ்க்கை உருவாக தாம் பிரார்த்திப்பதாக லங்கா சமசமாஜக்கட்சி பொதுச் செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், தற்போது பாமர மக்கள் பசி பட்டினியை எதிர்நோக்குகின்றனர். அரசு அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மக்கள் மீது வரியை சுமத்தி பொருளாதாரத்தை சீர் செய்ய அரசு முயற்சி செய்கின்றது.

எமது கட்சி தமிழ் மக்களுக்கு அதிகார பரவலாக்கப்பட வேண்டும். பொலிஸ், காணி அதிகாரங்களும் அதில் உள்வாங்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு பிறக்கும் புத்தாண்டில் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## பெயர் மாற்றம்

கோறளைப் பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் புதூர் கதிரவெளி எனும் விலாசத்தில் வசிக்கும் கதிர்காமத் தம்பி சசிகரன் ஆகிய எனது பிறப்பு சான்றிதழில் கதிர்காமத் தம்பி சசிகலா என்றும் பெண் எனவும் வைக்கப்பட்டுள்ளது. எனது அனைத்து ஆவணங்களிலும் கதிர்காமத்தம்பி சசிகரன் ஆண் என உள்ளதால் எனது பிறப்பு சான்றிதழில் கதிர்காமத்தம்பி சசிகரன் ஆண் என மாற்றம் செய்யவுள்ளேன் என இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துகின்றேன். எனது பிறந்த ஆண்டு 1988-02-08, B.C.NO. 9086

**கதிர்காமத்தம்பி சசிகரன்**
**புதூர் கதிரவெளி**

## மீட்கப்படாத அடகுப் பொருட்களை ஏலத்தில் விற்றல்

வரையறுக்கப்பட்ட மொரபே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்

01. ஹபுகஸ்தலாவ கிராமிய வங்கி
02. மாவெல கிராமிய வங்கி
03. நவதிஸ்பனே கிராமிய வங்கி
04. நுகவெல / நயாபான கிராமிய வங்கி
05. கொரக்கஓய கிராமிய வங்கி
06. ரொஜசன்கம கிராமிய வங்கி
07. தொரகல கிராமிய வங்கி

ஆகிய கிராமிய வங்கிகளில் 2017.06.01 முதல் 2022.09.30 வரை அடகு வைக்கப்பட்டு, 2024.01.17 வரை மீட்கப்படாத அடகுத் தங்க நகைகள் 2024.01.20 மற்றும் 2024.01.21 ஆகிய இரு தினங்களில் மு.ப. 10.00 முதல் தலைமையக மேல் மாடியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுவதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**வ/ப. மொரபே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**கொரக்கஓய, நாவலப்பிட்டிய,**
**தொ.பே. 054 - 2222398**

**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

## வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் - 2024

2024 ஆம் ஆண்டிற்கான கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிற்கான பொருட்கள், வேலை மற்றும் சேவைகள் வழங்குவதற்காக வழங்குனர்கள் / ஒப்பந்ததாரர்களை பதிவு செய்வதற்காக செயலாளர், விவசாய அமைச்சினால் தேசிய உற்பத்தியாளர்கள், தேசிய வழங்குனர்கள், ஒப்பந்ததாரர்கள், ஜனநாயக அமைப்புகள் மற்றும் வெளிநாட்டு வழங்குனர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்து சந்தை விலை மேற்கோள் முறையின் கீழ் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தொடர்புடைய விண்ணப்பம் மற்றும் பிற விவரங்கள் பதிவிறக்கம் செய்ய கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் **www.agrimin.gov.lk** இணையதளத்தைப் பார்வையிடவும்.

2023 ஆம் ஆண்டுக்கு பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் 2024 ஆம் ஆண்டிற்கு செல்லுபடியாவதுடன், அவர்கள் மீண்டும் பதிவு செய்யப்படத் தேவையில்லை.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை உரிய ஆவணங்கள் மற்றும் கட்டணம் செலுத்திய இரசீதுடன் **2024.01.16** ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு முன்னர் **சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம் III), விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் 80/5, இரஜமல்வத்த வீதி, பத்தரமுல்லை** எனும் முகவரிக்கு பதிவு தபால் மூலமாக அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலதிக தவல்களைப் பெற்றுக்கொள்ள பின்வரும் தொலைப்பேசி இலக்கத்திற்கு அழைக்கவும்.

**செயளாலர்**
**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**
**தொ.பே. 011-2887406**

SELACINE

# சிறுவர்களுடன் விடுதியில் தங்கியிருந்த ஆசிரியர் கைது

**அநுராதபுரம் மேற்குத் தினகரன் நிருபர்**

எப்பாவள நகரில் விடுதி ஒன்றில் 13 வயதுடைய இரு சிறுவர்களுடன் தங்கி இருந்த 51வயதுடைய ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்

விளையாட்டு ஆசிரியரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக எப்பாவள பொலிஸார் தெரிவித்தனர் .

கடந்த 27ஆம் திகதி அநுராதபுரம் பொது விளையாட்டரங்களில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட பயிற்சிக்காக தனது பாடசாலையில் தரம் 08ல் கல்வி பயிலும் 13 வயது சிறுவர்களை அழைத்துச் செல்வதாக குறித்த பாடசாலை ஆசிரியர் பெற்றோரிடம் கூறியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்குரிய ஆசிரியர் இரண்டு சிறுவர்களை வீட்டிற்கு அனுப்பாமல் எப்பாவளையில் உள்ள விடுதி ஒன்றில் தங்க வைத்துள்ளார். இதன் போது நபர் ஒருவரினால் பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய தகவல் ஒன்றிற்கமைய (28) ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# பச்சை மிளகாய் விலை அதிகரிப்பு

**( கல்நேவ தினகரன் விசேட நிருபர் )**

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் கடந்த 30 ஆம் திகதி பச்சை மிளகாய் ஒரு கிலோ ரூபா 1200/= முதல் ரூபா 1600/= வரை மொத்த விற்பனை செய்யப்படுவதுடன், சில்லறை விலையாக ரூபா 1800 ரூபா முதல் 2000 /= ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



அத்தோடு பெரிய வெங்காயம் ஒரு கிலோ கிராம் ரூபா 700/= இற்கு விற்கப்படுகின்றது. அத்தோடு 100 கிராம் பச்சை மிளகாய் ரூபா 200/= இற்கு விற்பனை செய்யப்படுவதுடன், ஒரு மிளகாய் ரூபா 15 இற்கும் 20 ரூபாவிற்கும் இடையில் விற்பனை செய்யப்படுகின்றது. தக்காளி ஒரு கிலோ கிராம் ரூபா 600 முதல் ரூபா 800 வரை விற்பனை செய்யப்படுகின்றது. மரக்கறிகளின் விலைகளும் வெகுவாக உயர்ந்துள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

## மீட்கப்படாத அடகு தங்க பொருட்கள்

## பகிரங்க ஏல விற்பனை

வரையறுக்கப்பட்ட இலங்கை கிராமிய வங்கி கூட்டமைப்பின் அடகு முகவர்களான வரையறுக்கப்பட்ட அரநாயக்க பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தில்,

| | |
|---|---|
| உஸ்ஸாபிட்டிய | அம்பலகந்த |
| திப்பிட்டிய | அரநாயக்க |
| தெபத்கம | அஸ்மடல |
| உடுவேவல | ரஹல |
| தல்கஸ்பிட்டிய | |

ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2022.10.31ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு ஆனால் 2024.01.20ஆம் திகதிக்கு மீட்கப்படாத அடகு தங்கப் பொருட்கள் 2024.01.21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திப்பிட்டிய கிராமிய வங்கி கிளை வளவில் மு.ப. 10.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். இதற்கு.

**பொது முகாமையாளர்**
**வரையறுக்கப்பட்ட அரநாயக்க ப.நோ.கூ. சங்கம்**
**உஸ்ஸாபிட்டிய**
**2023.12.27**
**தொலைபேசி இலக்கம் 0352246159**

# தேருநர் இடாப்பு மீளாய்வு - 2024

## தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தல்

**2024 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளை 2024 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி ஆரம்பிப்பதாக 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம் அல்லது சட்டம் என குறிப்பீடு செய்யப்படும்) 12(1) ஆம் பிரிவுக்கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

02. தற்போது செல்லுபடியாகும் 2023 ஆம் ஆண்டின் பிரதான தேருநர் இடாப்பு, 2023(1) மற்றும் 2023(2) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்கள் (இதனகத்துப் பின்னர் "செல்லுபடியாகும் தேருநர் இடாப்பு" என குறிப்பீடு செய்யப்படும்) அல்லது அவற்றின் பகுதிகளின் பிரதிகள் பதிவு அலுவலர்களால் கீழ் குறிப்பிடப்படும் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்படும்.

| இடாப்பு அல்லது அவற்றின் பகுதிகளின் பிரதிகள் காட்சிப்படுத்தப்படும் அலுவலகங்கள் | காட்சிப்படுத்தப்படும் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பகுதிகள் |
|---|---|
| மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் | தேர்தல் மாவட்டத்திற்கு / நிர்வாக மாவட்டத்திற்குரிய செல்லுபடியாகும் தேருநர் இடாப்பின் முழுப் பிரதி |
| கிராம அலுவலர் அலுவலகங்கள் | கிராம அலுவலர் பிரிவின் செல்லுபடியாகும் தேருநர் இடாப்பின் பகுதி |

